**கவனிக்க.**- 10.10.2025 ஆந் திகதிய 2458 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2459 - 2025 ඔක්තෝබර් මස 17 වැනි සිකුරාදා - 2025.10.17

2459 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1810 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1840 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1807 - B 82729- 403 (2025/10)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## 1877/27 ஆம் இலக்க 2014.08.28 ஆந் திகதிய இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணத்தின் 11.2 ஆம் பிரிவின் கீழ் இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்தின் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புதல்

இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்தில் வெற்றிடங்கள் நிலவும் சுற்றாடல் அமைச்சின் இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்தின் பணிப்பாளர் பதவிக்கு நியமிப்பதற்காக 1877/27 ஆம் இலக்க 2014, ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள, 1996/25 மற்றும் 2016 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 2006.01.01 ஆந் திகதி முதல் வலுவிலிருக்கும், இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணத்தின் 11.2 ஆம் பிரிவின் பிரகாரம், 2025.11.14 ஆந் திகதிக்கு பந்தி 02 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உரிய தகுதிகளை பூர்த்திசெய்துள்ள இலங்கை விஞ்ஞான சேவையில் தற்போது செயற்திறன்மிக்க வகையில் சேவையில் உள்ள தரம் I இற்கு உயர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கவனிக்க வேண்டியது**: நியமனத்தின் போது, இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் I க்கு பதவி உயர்வு பெற்றிருப்பது கட்டாயமாகும்.

01. **வெற்றிடங்களின் எண்ணிக்கை:**

| *தொடரிலக்கம்* | *அமைச்சு* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 01. | சுற்றாடல் அமைச்சு (சுற்றாடல் பிரிவு) | பணிப்பாளர் | 01 |

02. **பதவி உயர்வுக்காக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்:**

| *தொடரிலக்கம்* | *திணைக்களம்* | *பதவி* | *தகைமைகள்* |
|---|---|---|---|
| 01 | சுற்றாடல் அமைச்சு (சுற்றாடல் பிரிவு) | பணிப்பாளர் | தாவரவியல், மிருகவியல், சுற்றாடல் முகாமைத்துவம், சுற்றாடல் பொறியியல், வன விஞ்ஞானவியல், விவசாயம், சுற்றாடல் விவசாயம், சுற்றாடல் பொருளாதாரவியல் போன்ற பாடங்களில் ஒன்று தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பட்டப் பின்படிப்புடன் கூடிய இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்தின் அல்லது விசேட தரத்தின் பதவியொன்றுக்கு நியமனம் பெறாத விசேட தரத்தின் அல்லது தரம் I இன் உத்தியோகத்தராகவிருத்தல். |

03. **பதவிகளுக்காக தெரிவுசெய்யப்படும் முறை:**

(i) சேவை மூப்பு மற்றும் திறமைகளின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலம் அவ் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் புள்ளிகள் நடைமுறைக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கும் முறையான நேர்முகப் பரீட்சையொன்று நடத்தப்படும். வெற்றிடங்களை நிரப்புவது பற்றிய இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினுடையதாகும்.

(ii) இவ் வெற்றிடங்களை பூர்த்தி செய்யும் போது விண்ணப்பதாரர்கள் சிலர் ஒரே புள்ளிகளை பெற்றுக் கொண்டால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2019 (II) இன் பிரகாரம் அதில் சம புள்ளிக்ளை பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதுடன் திறமை அடிப்படையிலான நேர்முகப் பரீட்சையின் ஊடாக தேர்வு செய்யப்படும். அதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் அனுமதிக்கப்படும் மதிப்பீட்டு அளவுகோல்கள் மற்றும் புள்ளி அளவுத்திட்டமொன்று பயன்படுத்தப்படும். உரிய விண்ணப்பதாரர்களுக்கு இம் மதிப்பீட்டு அளவுகோல்கள் மற்றும் புள்ளி அளவுத்திட்டங்கள் தொடர்பாக அச்சந்தர்ப்பத்தில் முன் அறிவித்தலொன்று செய்யப்படும்.

04. **புள்ளி வழங்கும் நடைமுறை:**

| *பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *மொத்த புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| **1. சேவை மூப்புநிலை :** | | **50** |
| I.I. இலங்கை விஞ்ஞான சேவையில் முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்படும்.<br>➢ சிரேஸ்ட உத்தியோகத்தருக்கு அதிகபட்ச புள்ளிகள் வழங்கப்படும்.<br>மற்றைய உத்தியோகத்தர்களின் சேவைமூப்பு =<br>சேவை மூப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள அதிகபட்ச புள்ளி x குறித்த உத்தியோகத்தரின் மேலதிக சேவைக் காலம் (வருடம் x12+மாதங்கள்)<br>———————<br>கூடியசேவை மூப்பு உத்தியோகத்தரின் மேலதிக சேவைக் காலம் (வருடம் x12+மாதம்) | 50 | |
| **2. திறமைகள் :** | | **50** |
| I. ஆராய்ச்சி ரீதியான வெளியீடுகள் (Research Publications) - (துறை தொடர்பான தனியாக அல்லது குழுவாக செய்யப்பட்ட) | | |
| ➢ தேசிய மட்டத்தில் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி ரீதியான வெளியீடுகள் ( Local Research Publications) - ஒரு வெளியீட்டுக்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 2 வெளியீடுகளுக்காக | 04 | |
| ➢ சர்வதேச ரீதியாக வெளியிடப்பட்ட ஆராய்ச்சி வெளியீடுகள் ( International Research Publications ) - ஒரு ஆராய்ச்சி வெளியீட்டிற்காக 03 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 2 வெளியீடுகளுக்காக | 06 | |
| II. சுருக்கம் (Abstracts) – (துறைக்குரியதாக செய்யப்பட்ட) | | |
| ➢ இலங்கைக்குள் (Local ) - ஒரு சுருக்கத்திற்காக 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 02 சுருக்கங்களுக்காக | 04 | |
| ➢ சர்வதேச (International)- ஒரு சுருக்கத்திற்காக 2.5 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 02 சுருக்கங்களுக்காக | 05 | |
| III. ஆய்வுக் கட்டுரை – (துறைக்குரியதாக செய்யப்பட்ட) | | |
| ➢ ஒரு ஆய்வுக் கட்டுரைக்காக 04 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் ஆராய்ச்சி கட்டுரை 1 இற்கு (க.எ: இரண்டாம் வினைத்திறன்காண் பரீட்சை அல்லது I ஆம் தரத்திற்கு உயர்த்துவதற்கு தேவையாக கருதப்படுகின்ற பின்பட்டப்படிப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையை தவிர்ந்த வேறு ஆராய்ச்சிகளுக்காகவும் புள்ளிகள் வழங்கப்படும்.) | 04 | |

| *பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *மொத்த புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| IV. புத்தாக்கம் / கண்டுபிடிப்பு – (துறைக்குரியதாக செய்யப்பட்ட)<br>ஒரு புத்தாக்கம் / கண்டுபிடிப்பிற்காக 04 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் புத்தாக்கம் / கண்டுபிடிப்புக்கள் 02 ற்காக<br>(குறித்த உத்தியோகத்தர்களின் தலைமையின் கீழ் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட புத்தாக்கங்கள் என திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)<br>"*குறிப்பு*: குறித்த உத்தியோகத்தர்களின் தலைமையின் கீழ் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட புத்தாக்கங்கள் என திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அது நேர்முகப் பரீட்சை குழுவினால் மதிப்பீடு செய்து புத்தாக்கம் அல்லது கண்டுபிடிப்பு என உறுதிப்படுத்தியதன் பின்னர் புள்ளிகள் வழங்கப்படும்." | 08 | |
| V. செய்தித்தாள் / சஞ்சிகைக் கட்டுரைகள் – (துறைக்குரியதாக செய்யப்பட்ட)<br>ஒரு செய்தித்தாள்/சஞ்சிகைக் கட்டுரைகளுக்காக 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் செய்தித்தாள் / சஞ்சிகைக் கட்டுரைகள் 2 இற்காக | 04 | |
| VI. தெரிவு செய்யப்படும் பதவியின் கருமங்களுக்காக பங்களிப்பு செய்யும் விதம் தொடர்பில் கணினி மூலம் செய்யப்படும் 10 நிமிட முன்வைப்பு (Power Point Presentation)<br>I. தொடர்பு (Relevancy) - 03 புள்ளிகள்<br>II. ஆக்கத்திறன் / (Creativity ) - 03 புள்ளிகள்<br>III. அதற்காக அறிமுகப்படுத்தும் புத்தாக்க மற்றும் புதிய பரிந்துரைகள் (Innovations & Suggestions) - 03 புள்ளிகள்<br>IV. நேர முகாமைத்துவம் (Time Management) - 03 புள்ளிகள்<br>V. ஆங்கில மொழிப் புலமை (Proficiency in English) - 03 புள்ளிகள்<br>*குறிப்பு :*<br>(அ) மேற்படி (V) அளவுகோளின் கீழ் புள்ளிகளை பெற முடிவது விண்ணப்பதாரி ஆங்கில மொழியில் இவ் சமர்ப்பித்தலை செய்யும் போது மாத்திரம் ஆகும்.<br>(ஆ) முன்வைப்பதற்குரிய வன் பிரதியை (Hard copy) நேர்முகப் பரீட்சை குழுவிற்கு அச்சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிகமாக ஆங்கில மொழி மூலம் சமர்ப்பிக்கும் முன்வைத்தலில் வன் பிரதியையும் இச் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிப்பது கட்டாயமாகும். | 15 | |
| **மொத்தப் புள்ளிகள்** | | 100 |

05. அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கும், இலங்கை விஞ்ஞான சேவைப் பிரமாணத்தில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1877/27 மற்றும் 2014 ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள) அப்பிரமாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படும் அல்லது திருத்தங்களுக்கு கட்டுப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர்கள் இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆம் தரத்தில் வெற்றிடங்கள் நிலவுகின்ற மேற்படி பதவிகளுக்காக உரிய பதவிகளினது கடமையை பொறுப்பேற்கும் நாளிலிருந்து செயற்படும்படி உரிய பதவிகளுக்கு நியமித்தல் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் செய்யப்படும்.

06. இவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச தகைமைகளை பூர்த்தி செய்துள்ள தற்போது செயற்திறனோடு சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

07. கீழ்வரும் மாதிரிப் படிவத்திற்கமைய பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன், பதிவுத் தபாலில் 2025.11.14 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "செயலாளர், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07." என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் 1 பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புதல்" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் விண்ணப்பப்படிவம் காணாமற் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

08. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தல் மொழிகளுக்கிடையில் ஏதேனும் இணக்கப்பாடின்மை காரணப்படின் சிங்கள மொழிமூல அறிவித்தலே வலுவானதாகும்.

09. விண்ணப்பப்படிவத்தை www.pubad.gov.lk இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

2025, ஒற்றோபர் 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**……………………. அமைச்சின் இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்தின் …………….. பதவிக்காக விண்ணப்பித்தல்**

01. உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள் :

i. முழுப் பெயர் (ஆங்கிலத்தில்) ..........................................................................................................................

(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

ii. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) Mr./Mrs./Miss ..........................................................................
..................................................................................................................................................................

(உதா: GUNAWARDHANA, H. M. S. K.)

iii. முழுப் பெயர் (தமிழில்):..........................................................................................................................

iv. முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :……………..........................................................................................

v. பிறந்த திகதி:...........................................................................................................................................

vi. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் :........... மாதங்கள் :................ நாட்கள் :.................

vii. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :...............................................

viii. நிரந்தர முகவரி :………………………………………………….........................................................................
........................................................................................

ix. தொலைபேசி இலக்கம் :

அலுவலகம் : ..........................

கையடக்க :................................

x. மின்னஞ்சல் முகவரி :……………………………………………………………………………..

02.பதவி தொடர்பான தகவல் :

i. தற்போதைய சேவை நிலையம் மற்றும் முகவரி :..........................................................................................

ii. III தரத்திற்கு நியமனம் பெற்ற திகதி :..........................................................................................

iii. II தரத்திற்கு நியமனம் பெற்ற திகதி :..........................................................................................

iv. I தரத்திற்கு நியமனம் பெற்ற திகதி :..........................................................................................

v. தற்போது வகிக்கும் பதவி :..........................................................................................

vi. அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :..........................................................................................

03. சேவை மூப்பு :

| | | |
|---|---|---|
| 01 | நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி வரை இலங்கை விஞ்ஞான சேவையில் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவை காலம் | |
| 02 | நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி வரை இலங்கை விஞ்ஞான சேவையில் தரம் I இல் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவை காலம் | |
| 03 | சம்பளமற்ற லீவு உள்ளது /இல்லை என்பது பற்றி (சம்பளமற்ற லீவு பெற்றிருந்தால் பெற்றுக்கொண்ட நாட்களை குறிப்பிடவும்) | |

04. துறைக்குரிய தகைமைகள் :

4.1 குறித்த துறையில் ஈடுபாடு காட்டிய விசேட பங்களிப்பு

| *ஆராய்ச்சிகள் மற்றும் வெளியீடுகள்* | *விபரம்* | *குறித்த ஆண்டு* |
|---|---|---|
| ஆராய்ச்சி ரீதியான வெளியீடுகள்<br>I. தேசிய ரீதியாக வெளியிடப்பட்ட ஆராய்ச்சி வெளியீடுகள்<br>II. சர்வதேச ரீதியாக வெளியிடப்பட்ட ஆய்வு வெளியீடுகள் | | |
| சுருக்கம்<br>I. இலங்கைக்குள்<br>II. சர்வதேச ரீதியாக | | |
| ஆய்வுக் கட்டுரை | | |
| புத்தாக்கம் / கண்டுபிடிப்புக்கள் | | |
| செய்திக் கட்டுரைகள் | | |

05. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

மேற்குறிப்பிட்ட தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும் சரியானதுமென இதன் மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ......................... ..............................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

II ஆம் பகுதி

(அமைச்சின் செயலாளரினால்/ திணைக்களத் தலைவரினால் நிரப்புதல் வேண்டும்)

...................................................................... அமைச்சின் / திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்துடைய உத்தியோகத்தரான .................................................................... திரு. / திருமதி / செல்வியினால் சமர்ப்பிக்கப் பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் பிரத்தியேகக்கோவையில் உள்ள தகவல்களுக்கு ஏற்ப

சரியானது/பிழையானது. அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைச் செயற்பாடுகள் எதுவும் இல்லை / எடுக்கப்பட்டுள்ளது எனவும், அவ்வாறான செயற்பாடொன்று எதிர்வரும் காலங்களில் எடுப்பதற்கு கருதுவதாகவும் / இல்லை எனவும், விண்ணப்பங்கள் கோரும் திகதிக்கு உடன்முன்னரான 05 வருடங்கள் சம்பள ஏற்றத்தை உழைத்துள்ளார் / இல்லை எனவும், தயவுடன் அறியத்தருகின்றேன். அவரின் விண்ணப்பத்தை பரிந்துரை செய்கின்றேன்/செய்யவில்லை.

.........................................................
அமைச்சின் செயலாளர் / திணைக்களத் தலைவரின்
கையொப்பம்
உத்தியோகபூர்வ முத்திரை

திகதி :........................................

10-244

---

**இலங்கை நீதிபதிகள் நிறுவனம்**

**இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தில் வெற்றிடமாக உள்ள பின்வரும் பதவிகளுக்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன**

01. **செயலாளர் - வெற்றிடம் 01**

**தகைமைகள்:**

**வெளிவாரியான மற்றும் உள்ளக விண்ணப்பதாரிகள்**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சட்டத்துறையில் சாதாரண பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

2. பல்கலைக்கழக பட்டம்பெற்ற பின்னர், அந்தப் பதவியுடன் தொடர்புடைய ஒரு விடயத்துறையில் குறைந்த பட்சம் ஒரு வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

3. ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில் துறை பட்டய நிறுவனம் ஒன்றிலிருந்து சட்டம் தொடர்பில் தொழில் தகைமை ஒன்றைப் பெற்றுக் கொண்ட பின்னர் அந்தப் பதவியுடன் தொடர்புடைய ஒரு விடயத்தில் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவம்.

**சம்பள அளத்திட்டம் :**

2025.03.25 ஆந் திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 01/2025 இன் படி, இந்தப் பதவிக்கு ஏற்புடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 96,650.00 - 10 x 2,480 - 15 x 3,450 - ரூ.173,200.00 (MM 1-3 - 2025)

மேற்படி சம்பளம் 2027.01.01 முதல் அமுலுக்கு வரும் இந்த சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின்படி நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

02. **உள்ளகக் கணக்காய்வாளர் பதவி – வெற்றிடம் 01**

**தகைமைகள்:**

*வெளிவாரியான விண்ணப்பதாரிகள் (கீழே உள்ள தகைமை 1 அல்லது 2)*

1. கணக்கியல், நிதி, வணிகம் அல்லது இந்தப் பதவிக்கு பொருத்தமான பாடப்பிரிவில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீ கரிக்கப்பட்ட பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

பட்டம் பெற்ற பின்னர் பதவிக்கு பொருத்தமான விடயத்தில் குறைந்தது ஒரு (01) வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

2. பதவியின் பாடப்பிரிவுக்கு பொருத்தமான அங்கீ கரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் அமைப்பின் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று, தகுதியைப் பெற்ற பின்னர் பதவிக்கு பொருத்தமான விடயத்தில் குறைந்தது ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற் றிருக்க வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரிகள் (கீழே தகைமை 1 அல்லது2)**

1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரியான விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

2. "கனிஷ்ட முகாமையாளர்" JM சேவைப் பிரிவில் தொடர்புடைய துறையில் ஒரு பதவியில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையைப் பெற்றிருக்க வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 01/2025 இன் படி, இந்தப் பதவிக்கு ஏற்புடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்

ரூ. 91,690.00 -10 x 2,480 -15 x 3,450 - ரூ. 168,240.00 (MM 1-1-2025)

மேற்படி சம்பளம் 2027.01.01 முதல் அமுலுக்கு வரும். இந்த சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின்படி நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

**03. மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு அலுவலர் - வெற்றிடம் 01**

**தகைமைகள்:**

*வெளிவாரி விண்ணப்பதாரிகள் :*

1. புள்ளியியல், பொருளாதாரம், வணிகம், வணிக நிர்வாகம், வணிக முகாமை அல்லது இந்தப் பதவிக்கு ஏற்புடைய விடயத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

பட்டம் பெற்ற பின்னர், அந்தப் பதவிக்கு பொருத்த மான விடயத்துறையில் குறைந்தது ஒரு (01) வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழே 1 அல்லது 2)**

1. வெளிப்புற விண்ணப்பதாரர்களுக்கான மேற்குறித்த தகுதிகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
2. "கனிஷ்ட முகாமையாளர்" JM சேவைப் பிரிவில் தொடர்புடைய துறையில் ஒரு பதவியில் குறைந்த பட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 01/2025 இன் படி, இந்தப் பதவிக்கு ஏற்புடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்

ரூ. 91,690.00 -10 x 2,480 -15 x 3,450 - ரூ. 168,240.00 (MM 1-1-2025)

மேற்படி சம்பளம் 2027.01.01 முதல் அமுலுக்கு வரும். இந்த சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின்படி நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

**04. ஆராய்ச்சி அலுவலர் பதவி - 01 பதவி**

**தகைமைகள்:**

*வெளிவாரி மற்றும் உள்ளக விண்ணப்பதாரிகள்*

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சட்டத்துறையில் சாதாரண பட்டம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் கல்வி ஆராய்ச்சி அல்லது சட்டத் துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவத்துடன் உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக இருக்க வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 01/2025 இன் படி, இந்தப் பதவிக்கு ஏற்புடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்

ரூ. 91,650.00 -10 x 2,480 -15 x 3,450 - ரூ. 168,200.00 (AR 1-2025)

மேற்படி சம்பளம் 2027.01.01 முதல் அமுலுக்கு வரும். இந்த சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின்படி நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

**05. நிர்வாக அலுவலர் பதவி – வெற்றிடம் 01**

**தகைமைகள்:**

*வெளிவாரியான விண்ணப்பதாரிகள் :*

மனிதவள முகாமை, பொது நிர்வாகம், பொது முகாமை, வணிகம் அல்லது இந்தப் பதவிக்கு பொருத்தமான விடயத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

***உள்ளக விண்ணப்பதாரிகள் (கீழே 1 அல்லது 2) :***

1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப் பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய் திருக்க வேண்டும்.
2. "முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத" (MA 1) சேவைப் பிரிவின் தரம் II இல் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையைப் பெற் றிருக்க வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 01/2025 இன் படி, இந்தப் பதவிக்கு ஏற்புடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்

ரூ. 72,650.00 -10 x 1,360 - 18 x 2,040 - ரூ. 122,970.00 (JM 1-1-2025)

மேற்படி சம்பளம் 2027.01.01 முதல் அமுலுக்கு வரும். இந்த சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின்படி நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

06. **மொழிபெயர்ப்பாளர் - பதவி 01**

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள் :***

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பு தொடர்பில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

***உள்வாரி விண்ணப்பதாரர்கள்:***

2. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப் பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய் திருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 01/2025 இன் படி, இந்தப் பதவிக்கு ஏற்புடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்

ரூ. 64,320.00 -10 x 1,360 - 15 x 1,670 - 5 x 2,040 - ரூ. 113,170.00 (MA 1-1-2025)

மேற்படி சம்பளம் 2027.01.01 முதல் அமுலுக்கு வரும். இந்த சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின்படி நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

07. **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராதது) – வெற்றிடங்கள் 03**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் :**

I. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ், ஆங்கிலம், கணிதம் உட்பட குறைந்த பட்சம் 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

II. க.பொ.த. (உ./த.) பரீட்சையில் (பொதுப் பரீட்சை நீங்கலாக) ஏதேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

***உள்ளக விண்ணப்பதாரிகள் :***

பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்த முதன்மை தர திறன்சாராத, அரை திறன் சார்ந்த மற்றும் திறன் சாராத சேவை பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்கள்.

I. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ், ஆங்கிலம், கணிதம் உள்ளிட்ட குறைந்தது 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி அதிகார சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத் திலிருந்து கணினி தட்டச்சு அல்லது வேறு ஏதேனும் ஒத்த துறையில் ஒரு தகைமையைக் கொண்டிருத்தல் மேலதிக தகைமையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

II. தற்போதைய பதவியில் சேவை உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

III. விண்ணப்பங்களைப் பெறுவதற்கான இறுதித் திகதிக்குள் ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியான காலத்திற்கு நிரந்தரப் பதவியில் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

விண்ணப்பங்களைப் பெறுவதற்கான இறுதித் திகதிக்குள், நிரந்தரப் பதவியில் ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தை நிறைவு செய்திருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 01/2025 இன் படி, இந்தப் பதவிக்கு ஏற்புடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்

ரூ. 46,220.00 -10 x 540 - 7 x 630 - 12 x 1,080 - 12 x 1,280.00 - ரூ. 84,350.00 (MA 1-2-2025)

மேற்படி சம்பளம் 2027.01.01 முதல் அமுலுக்கு வரும். இந்த சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின்படி நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்-

i. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
ii. பதவிக்கான கடமைகளைப் புரிவதற்கு உடல் ரீதி யாகவும் மற்றும் உள ரீதியாகவும் தகுதியான வராக இருக்க வேண்டும்.
iii. நன்னடத்தையுடைய நபராக இருக்க வேண்டும்.

**வயது எல்லை :**

பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுவதற்கான இறுதி திகதியில் உள்ளவாறு 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு அதிகபட்ச வயது எல்லை ஏற்புடையதாகமாட்டாது.

**ஏனைய கொடுப்பனவுகள்**

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்.

**ஆட்சேர்ப்பு முறை :**

மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கட்டமைக் கப்பட்ட நேர்காணலில் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**சேவை நிபந்தனைகள் :**

- இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவை.
- ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்: ஊழியர் தனது சம்பளத்தில் 8% பங்களிப்பாகவும், தொழில்தருனர் 12% பங்களிப் பாகவும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பங்களிப்புச் செய்வர். தொழில்தருனர் ஊழியர், ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 3% பங்களிப்பை வழங்குவார்.

**விண்ணப்பிக்கின்ற நடைமுறை :**

இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தின் இணையதளத்தில் <http://www.judgesinstitute.lk/> வெளியிடப்பட்டுள்ள முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு 31.10.2025 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்ப வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் இறுதித் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும், தபாலில் தொலைந்து போகின்ற விண்ணப்பங்கள் தொடர்பில் எவ்வித முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பமாட்டாது.

விண்ணப்பம் இடப்படுகின்ற கடித உறையின் மேல் இடது மூலையில் விண்ணப்பிக்கப்பட்ட பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

பணிப்பாளர்.

இலங்கை நீதிபதிகள் நிறுவனம்,
இல. 80 (5ஆவது மற்றும் 6ஆவது தளங்கள்),
அதிகரண மாவத்தை,
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

விண்ணப்பிக்கப்பட்ட பதவி: ...............................................

தனிப்பட்ட தகவல்கள்

- முழுப் பெயர் : ...................................................................
- தனிப்பட்ட முகவரி : ........................................................
- தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:............................
- பிறந்த திகதி : ......................... வயது :............................
- தொலைபேசி இலக்கம் : ..................................................
- மின்னஞ்சல் முகவரி : ......................................................
- பால் நிலை : ................................................................

கல்வித் தகைமைகள் :

க.பொ.த. (சா/த) பரீட்சை

| *பாடம்* | *சித்தி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க.பொ.த. (உ/த) பரீட்சை

| *பாடம்* | *சித்தி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |

ஏனைய கல்வித் தகைமைகள் (பட்டம்/டிப்ளோமா அல்லது உயர் கல்வித் தகைமைகள்) :

1. ..................................................................................
2. ..................................................................................
3. ..................................................................................
4. ..................................................................................
5. ..................................................................................

தொழில்முறை தகுதிகள் :

1. ..................................................................................
2. ..................................................................................
3. ..................................................................................
4. ..................................................................................
5. ..................................................................................

சேவை அனுபவம்

1. ..............................................................................
2. ..............................................................................
3. ..............................................................................
4. ............................................................................
5. ..............................................................................

நீங்கள் விண்ணப்பிக்கும் பதவி தொடர்புடைய அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளீர்களா என்பதைக் தயவு செய்து குறிப்பிடவும்.

(ஆம்/இல்லை) ........................................................................
.........................................................

உறவினர் அல்லாத இரண்டு நபர்களின் தகவல்கள்

| | |
|---|---|
| 1. பெயர்:<br>பதவி:<br>தொலைபேசி இலக்கம்: | 2. பெயர்:<br>பதவி:<br>தொலைபேசி இலக்கம்: |

விண்ணப்பதாரியின் உறுதியுரை

இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கிய தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்று நான் உறுதிமொழிகின்றேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம் .................................

திகதி ....................................

10-247

---

## இலங்கை நிரந்தரக் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவுக்கு கப்பலோட்டிகளை (SAILORS) நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வெற்றிடங்கள்

1. இலங்கை நிரந்தரக் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவுக்கு ஆண் மற்றும் பெண் கப்பற்றுறை தொழில்வினைஞர்களை நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அதற்கமைய, பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஆண்/ பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இலங்கை நிரந்தர கடற்படையில் இணைவதற்கு, ஆண்/ பெண் விண்ணப்பதாரிகள் பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அ. குடியுரிமை – இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ. வயது – 2025, கார்த்திகை மாதம் 06 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும், 33 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

இ. உயரம் – ஆண் 5' 5" (165.10 செ.மீ )
பெண் 5' 2" (157.48 செ.மீ)

ஈ. உடல் திணிவுச் சுட்டி – 17- 27

உ. மார்பு – ஆண் 32" (81.28 செ.மீ)

ஊ. வண்ணப் பார்வை – STD II

எ. தூரப் பார்வை – 6/6 (மூக்குக் கண்ணாடி/ வில்லை இன்றி).

(6/12 பார்வைக் கூர்மை மூக்குக் கண்ணாடி மூலம் 6/6 என சரிசெய்து கொண்டுள்ள விண்ணப்ப தாரிகள் சம்பந்தமாக பரிசீலிக்கப்படும்).

ஏ. சிவில் அந்தஸ்து – திருமணமான/ திருமணமாகாத இரு தரப்புகளும் விண்ணப்பிக்கலாம். ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட எந்தவொரு பயிலுநரும் பயிற்சிக் காலத்தின் போது திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

3. **ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பிரிவு**: சிவில் பொறியியல் தொழில்வினைஞர்

4. **கல்வித் தகைமைகள் :**

அ. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் தாய்மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தலும், கீழ்க் காட்டப்பட்டுள்ள அந்தந்த தரவரிசைக்குரியதாக அந்தந்த தொழில்சார் தகைமைகளையும் தொழில்சார் அனுபவங்களையும் பெற்றிருத்தலும் வேண்டும்.

ஆ. க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் கணிதப் பாடப் பிரிவில்/ பொறியியல் தொழில்நுட்பவியல் பாடப் பிரிவில் கற்ற விண்ணப்பத்தாரிகள் மீது முன்னுரிமை அளிக்கப்படும்.

5. **தொழில்சார் தகைமைகள் :**

அ. சிவில் பொறியியல் தொழில்வினைஞர் (வகுப்பு III) பதவிக்கான தொழில்சார் தகைமைகள் (18 - 33 வயது)

(1) தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (NCT) சிவில் கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(2) தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (NCT) கணிய அளவையியல் (Quantity Surveying) கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(3) கைத்தொழில் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தேசிய சான்றிதழ் (NCIT) சிவில் கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(4) மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப் பட்ட நிறுவனமொன்றில் அதற்கு இணையான (NVQ V) மட்டத்தில் தொழில்நுட்பச் சான்றிதழ்/ டிப்ளோமா கற்கைநெறியை வெற்றி கரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

மற்றும்

(5) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் மூன்று (03) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

ஆ. சிவில் பொறியியல் தொழில்வினைஞர் (வகுப்பு IV) பதவிக்கான தொழில்சார் தகைமைகள் (18 - 30 வயது)

(1) தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (NCT) சிவில் கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(2) தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (NCT) கணிய அளவையியல் (Quantity Surveying) கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(3) கைத்தொழில் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தேசிய சான்றிதழ் (NCIT) சிவில் கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(4) மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப் பட்ட நிறுவனமொன்றில் அதற்கு இணையான (NVQ V) மட்டத்தில் தொழில்நுட்பச் சான்றிதழ்/ டிப்ளோமா கற்கைநெறியை வெற்றி கரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

மற்றும்

(5) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் மூன்று (03) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

இ. சிவில் பொறியியல் தொழில்வினைஞர் (தரம் I) பதவிக்கான தொழில்சார் தகைமைகள் (18 - 28 வயது)

(1) தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (NCT) சிவில் கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(2) தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (NCT) கணிய அளவையியல் (Quantity Surveying) கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(3) கைத்தொழில் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தேசிய சான்றிதழ் (NCIT) சிவில் கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

அல்லது

(4) மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால்(TVEC)அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அதற்கு இணையான (NVQ V) மட்டத்தில் தொழில்நுட்பச் சான்றிதழ்/ டிப்ளோமா கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(5) அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் வடிவமைப்பு தொடர்பான ஒரு வருட முழுநேர தேசிய சான்றிதழ் (NCED) கற்கைநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப் பட்ட நிறுவனமொன்றில் அதனையொத்த (NVQ IV) மட்டத்தில் தொழில்நுட்பச் சான்றிதழ் கற்கைநெறியொன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

மற்றும்

(6) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் இரண்டு (02) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

ஈ. சிவில் பொறியியல் தொழில்வினைஞர் (தரம் II) பதவிக்கான தொழில்சார் தகைமைகள் (18 - 26 வயது)

(1) அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் வடிவமைப்பு தொடர்பான ஒரு வருட முழுநேர தேசிய சான்றிதழ் (NCED) கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

அல்லது

(2) மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அதனையொத்த (NVQ IV)

மட்டத்தில் தொழில்நுட்ப சான்றிதழ் கற்கை நெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

மற்றும்

(3) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் ஒரு (01) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

உ. சிவில் பொறியியல் தொழில்வினைஞர் (தரம் III) பதவிக்கான தொழில்சார் தகைமைகள் (18 - 24 வயது)

(1) அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் வடிவமைப்பு தொடர்பான ஒரு வருட முழுநேர தேசிய சான்றிதழ் (NCED) கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(2) மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அதனையொத்த (NVQ IV) மட்டத்தில் தொழில்நுட்ப சான்றிதழ் கற்கைநெறியொன்றை வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல்.

6. மேற்படி 1, 2, 4 மற்றும் 5 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யாத ஆண்/ பெண் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சையின் போது உயரம், கண்பார்வை, உடல் நிறை என்பன பரீட்சிக்கப்படும். வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அளவீடுகளுக்கு அமைய உயரம், கண்பார்வை மற்றும் உடல் நிறை இல்லாத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு முன்னிலைப்படுத்தப்படமாட்டார்கள். எவரேனுமொரு விண்ணப்பதாரியின் உயரம் உரிய அளவில் இல்லாதிருப்பினும்கூட, அவரிடம் கடற்படைக்கு நன்மை பயக்கும் திறன்/ ஆற்றல் காணப்படுமாயின், கடற்படைத் தளபதியின் அங்கீகாரத்துக்குக் கட்டுப்பட்டு அவ்விண்ணப்பதாரி பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.

7. **சேவை நிபந்தனைகள் :**

அ. விண்ணப்பதாரிகள், தொழில்வினைஞர் பிரிவில் III, IV வகுப்புகளைச் சேர்ந்த மற்றும் I, II, III தரங்களைச் சேர்ந்த கப்பலோட்டிகளாக (Sailors), அடிப்படை சேவைக் காலமாக 15 ஆண்டுகளுக்கு, நிரந்தரக் கடற்படைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள் என்பதுடன், அவர்கள் இலங்கைக் கடற்படையில் அடிப்படைப் பயிற்சி நெறிகளை பின்பற்றுதலும் வேண்டும்.

ஆ. பயிலுநர்களாக பயிற்சி பெறும் காலப்பகுதியிலும் அதன் பின்னரும், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கப்பலோட்டிகள் கடற்படைச் சட்டத்திற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

இ. ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட எல்லா கப்பலோட்டிகளுக்கும் எல்லா வசதிகளுடன் சீருடைகளும் வழங்கப்படும்.

ஈ. பயிற்சிக் காலத்தின் போது, ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கப்பலோட்டிகளுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகளும் கடற்படையினால் வழங்கப்படும்.

உ. பயிற்சி பெறும் காலப்பகுதியில், எவரேனுமொரு கப்பலோட்டிக்கு சுய விருப்புடன் கடற்படையிலிருந்து விலகுவதற்குத் தேவைப்பட்டால், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அக்கப்பலோட்டி சார்பில் அது வரை மேற்கொண்ட அனைத்து செலவினங்களையும், சம்பந்தப்பட்ட கப்பலோட்டி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

ஊ. எல்லா கப்பலோட்டிகளும், கடமை நிமித்தம் அல்லது பயிற்சிக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையின் எப்பாகத்திற்கும் அல்லது வெளிநாட்டிற்கு அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

8. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள் :**

தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் கீழ் அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்தும் வகையில் தற்போது அமுலிலுள்ள, அதேபோன்று இனிவருங் காலங்களில் விதிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகள் மற்றும் நியதிச்சட்டங்கள் என்பவற்றுக்கு இணங்கியொழுகி செயற்படுதல் வேண்டும்.

9. **சம்பளமும் கொடுப்பனவுகளும்:**

05/2025 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2025.04.01ஆந் திகதியிலிருந்து சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்படும். அதற்கமைய,

அ. அடிப்படைச் சம்பளம் – ரூ. 49,197.00
ஆ. வாழ்க்கைச் செலவுப்படி – ரூ.17,800.00
இ. சீருடை பேணுதல் கொடுப்பனவு – ரூ. 350.00
ஈ. கஷ்டப் பிரதேச கொடுப்பனவு (நடவடிக்கை பிரதேசங்களின் பொருட்டு) – அடிப்படைப் பயிற்சியின் பின் உரித்தாகும்.

உ. கஷ்டப் பிரதேச கொடுப்பனவு (நடவடிக்கை சேவையல்லாத பிரதேசங்களின் பொருட்டு) – அடிப்படைப் பயிற்சியின் பின் உரித்தாகும்.

ஊ. ஏனைய கொடுப்பனவு – விசேட கொடுப்பனவு – ரூ. 1,000.00
விசேட மேலதிக கொடுப்பனவு – ரூ. 2,400.00

எ. மொத்த சம்பளம் – ரூ. 70747.00

ஏ. உணவு கொடுப்பனவு உட்பட (சந்தர்ப்பத்திற்கு அமைய) – ரூ. 29025.00
மொத்தச் சம்பளம்: அண்ணளவாக (பங்கீட்டுக் கொடுப்பனவு உட்பட) – ரூ. 99,772.00

ஐ. இலவசமாக புகையிரதத்தில் பயணிக்கக்கூடியவாறு ஒரு வருடத்திற்கு மூன்று சோடி புகையிரத ஆணைச் சீட்டுகள் (ஏற்புடையவாறு கப்ப லோட்டிக்கு, வாழ்க்கைத் துணைக்கு, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப்போருக்கு) உரித்தாகும்.

ஒ. முகாமில் தங்கியிருக்கும் கப்பலோட்டிகளுக்கு மாதத்திற்கு ஒரு தடவை என்றவாறு, விடுதி யிலிருந்து தனது வீட்டிற்குப் போய்வருவதற்கு, மேலதிகமாக ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டு அல்லது பேரூந்து வண்டி கட்டணம் செலுத்தப்படும்.

ஓ. இலவசமாக மருத்துவ வசதிகள் வழங்கப்படும். (ஏற்புடையவாறு கப்பலோட்டிக்கு, வாழ்க்கைத் துணைக்கு, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப் போருக்கு).

ஔ. அரசாங்க விடுதிகளில் தங்கியிராத திருமணமான கப்பலோட்டிகளுக்கு வீட்டு வாடகைக் கொடுப் பனவாக ரூ. 2,400.00 இலிருந்து ரூ. 6,600.00 வரை வழங்கப்படும்.

ஃ. திருமணமான கப்பலோட்டிகளுக்காக திருமண மானோர் தங்குமிடங்களில் வெற்றிடங்கள் ஏற்படும் போது அதற்கமைவாக விடுதிகள் வழங்கப்படும். இதற்கான வாடகை அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையவாறு வசூலிக்கப்படும்.

10. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்:**

அ. விண்ணப்பதாரிகள் கீழ்க் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பப்படிவத்தில் உள்ள எல்லாப் பந்தி களையும் முடியுமான விபரங்களுடன், தமது கையெழுத்தில் தெளிவாகப் பூர்த்தி செய்தல் வேண்டும். மேற்படி சரியாகவும், தெளிவாகவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை, 2025,............ நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, “சிரேஷ்ட பதவி நிலை அலுவலர் (ஆட்சேர்ப்பு), கடற்படைத் தலைமையகம் த.பெ. இல. 593, கொழும்பு” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “இலங்கை நிரந்தரக் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவுக்கு நேரடியாக கப்பலோட்டிகளை (Sailors) ஆட் சேர்ப்புச் செய்தல்” எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரத்திற்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும், இவ் அறிவித்தலில் காட்டப்பப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ற விதத்தில் அமையாத விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இது தொடர்பான மேலதிக விபரங்களை www.navy.lk இணையத்தளத்தில் அல்லது 011-7195155, 011-7195162, 076-0275685 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனங்களில்/ சபைகளில்/ சிவில் நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப் பங்கள், தமது திணைக்கள/ கூட்டுத்தாபன/ சபை/ நிறுவனத் தலைவர்கள் ஊடாக, தெரிவு செய்யப் பட்டால் விடுவிக்க முடியுமென்ற அத்தாட்சியுடன் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

இ. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக் கப்படும் போது அல்லது வேறு சந்தர்ப்பங்களில் அழைக்கப்படும் போது, பின்வரும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ்.

(2) விண்ணப்பித்த பிரிவுக்கு ஏற்புடையதான கல்வித் தகைமைகள் காணப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதற்கு கல்விச் சான்றிதழ்கள்.

(3) பாடசாலை விடுகைச் சான்றிதழ்.

(4) ஆறு (06) மாத காலப் பகுதிக்கு உட்பட்டதாக பெறப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்.

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட தொழில்/ தொழில்நுட்பப் பயிற்சிச் சான்றிதழ் மற்றும் அனுபவம் இருப்பின் அதற்கான சான்றிதழ்கள்.

(6) சமீபத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மூன்று நற் சான்றிதழ்கள். அவற்றுள் ஒன்று விண்ணப்ப தாரர் கடைசியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரால் வழங்கப்பட்ட சான்றிதழாக இருத்தல் வேண்டும். மற்றைய சான்றிதழ்கள் இரண்டு

வருடங்களுக்கும் மேலாக விண்ணப்பதாரியை நன்கு தெரிந்த அறிமுகமான பொறுப்புவாய்ந்த ஒருவரினால் வழங்கப்பட்ட சான்றிதழாகவும், தற்போதைய தொழில்தருநர் ஒருவரினால் (தொழில் செய்பவராயின்) வழங்கப் பட்ட சான்றிதழாகவும் இருத்தல் வேண்டும்.

(7) விளையாட்டுத்துறை மற்றும் ஏனைய செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள்.

ஈ. ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்ப தாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

உ. சம்பந்தப்படாத வேறு ஆவணங்களையோ அல்லது ஆவணங்களின் மூலப் பிரதிகளையோ விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் கூடாது.

ஊ. விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை அனுப்பி, அவை காணாமல் போன பிறகு கடற்படை பொறுப்புக் கூறாது.

11. விண்ணப்பப்படிவத்தில் பொய்யான கூற்றுக்களை வெளிப்படுத்துதல், அத்தகைய பொய்யான கூற்று விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரிய வருமாயின், அவரது விண்ணப்பப்பம் நிராகரிக்கப்படுவதற்கும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரிய வருமாயின் அவரை சேவையிலிருந்து நீக்குவதற்கும் உட்படும்.

12. **தெரிவு செய்தல்/ நேர்முகப் பரீட்சை முதலியன:**

அ. மேற்கூறப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் இலங்கை கடற்படையினால் நடாத்தப்படுகின்ற அடிப்படை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அதில் தேர்ச்சியடைந்த பின் தேர்வுச் சபையினால் நடாத்தப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அந்நேர்முகப் பரீட்சையில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரிகள் மாத்திரம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள உடல் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சையில் தேர்ச்சியடைதல் வேண்டும்.

ஆ. உடல் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சையில் தேர்ச்சியடைவதற்கான தேவைப்பாடுகள்:

| *உடற்பயிற்சி நிகழ்ச்சி* | *நேரம் (நிமிடம்/ நொடிகள்)* | *ஆண்* | *பெண்* |
|---|---|---|---|
| 1600 மீற்றர் ஓட்டம் | 01 நிமிடம் | 09 நிமிடம் | 11 நிமிடம் |
| தள்ளுதல்(Push up) | 01 நிமிடம் | 12 தடவை அல்லது அதற்கு மேல் | 08 தடவை அல்லது அதற்கு மேல் |
| இருத்தல் (Sit up) | | 10 தடவை அல்லது அதற்கு மேல் | 07 தடவை அல்லது அதற்கு மேல் |

இ. உடற் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மட்டுமே கடற்படை மருத்துவ சபை முன் தோற்றுதல் வேண்டும் என்பதுடன், அதில் தகுதிபெறும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் இலங்கை நிரந்தரக் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவுக்கு கப்பலோட்டியொருவராக (Sailors) நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்.

ஈ. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி, நேரம், இடம் முதலான விபரங்கள், அவர்களினால் வழங்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு வட்ஸ்எப் (whatsApp) மூலம் மட்டும் அறிவிக்கப்படும் என்பதுடன், தபால் மூலமாக அல்லது வேறு எந்தவொரு முறை மூலமாகவும் அறிவிக்கப்படமாட்டாது. மேலும், நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளித்தல் தொடர்பாக பிரயாணச் செலவுகளோ அல்லது வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்படவும் மாட்டாது.

உ. விண்ணப்பிக்கப்பட்ட பதவி சம்பந்தமாக விண்ணப்பதாரியொருவர் அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டையை விண்ணப்பதாரி சமர்ப்பித்தல் வேண்டும்.

ஊ. விண்ணப்பதாரிகளை சிபாரிசு செய்வதற்கு எண்ணுகின்ற எவரொருவராயினும், அவருக்கு நற்சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலமே சிபாரிசு செய்தல் வேண்டும். விண்ணப்பதாரிகளை தெரிவு செய்வதற்கு எவ்விதத்திலேனும் தூண்டுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் விண்ணப்பதாரிகளை தகுதியிழக்கச் செய்யும்.

எ. ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகைமை பெறாத விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

ஏ. விண்ணப்பதாரிகளினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் சம்பந்தமான சான்றிதழ்கள், பரீட்சைத் திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் அவற்றின் நம்பகத்தன்மை உறுதி செய்துகொள்ளப்படும்.

ஐ. எல்லா விண்ணப்பதாரிகளினதும் பாதுகாப்பு இசைவு அறிக்கைகள், இலங்கை கடற்படைத் தலைமையகத்தினால் மீள் பரீட்சித்தலுக்காக சமர்ப்பிக்கப்படும்.

ஒ. இலங்கைக் கடற்படைக்கு விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் தொழிற்பாடு தொடர்பான இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் இலங்கைக் கடற்படைத் தளபதிக்கு உரியது. மேலும், தேசிய பாதுகாப்பு, இலங்கைக் கடற்படையின் நடவடிக்கை மற்றும் நிர்வாகத் தேவைகளுக்கு ஏற்ப மேற்குறித்த தேவைகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றங்களைச் செய்வதற்கான இறுதி முடிவெடுக்கும் அதிகாரமும் இலங்கைக் கடற்படைத் தளபதிக்கு உரியது.

*குறிப்பு*: இவ் வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுவதுடன். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படின், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான வாசகம் மேலோங்கி நிற்கும்.

பீஏகேஎஸ்பி பானகொட, ஆர்எஸ்பி, யூஎஸ்பி, என்டீசீ, பிஎஸ்சீ
வைஸ் அத்மிரால்,
இலங்கைக் கடற்படைத் தளபதி.

இலங்கைக் கடற்படைத் தலைமையகம்,
த.பெ. இல. 593,
கொழும்பு 01.

**இலங்கை நிரந்தரக் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவுக்கு கப்பலோட்டிகளை (Sailors) நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம்**

1. குடியுரிமை: ......................................................................................

(இலங்கை பிரசையாவது, வம்சாவளியிலா அல்லது பதிவு மூலமா என்பதைக் குறிப்பிடுக. பதிவு மூலமாயின் சம்பந்தப்பட்ட சான்றிதழின் திகதியையும் இலக்கத்தையும் குறிப்பிடுக).

2. விண்ணப்பிக்கும் பிரிவு:.......................................

3. முழுப் பெயர் (தேசிய ஆளடையாள அட்டையின் படி):..................................

4. தேசிய ஆளடையாள அட்டை இல. :............................................................

5. நிரந்தர முகவரி:...................................

6. அஞ்சல் முகவரி:..................................

7. பிறந்த திகதி: ..........................................................

8. வயது (2025 .................. மாதம்………. ஆம் திகதிக்கு: ............................)

வருடங்கள் : ...... மாதங்கள் : ...... நாட்கள்: ......

9. உயரம்: ....................... (அங்குலம்)

மார்பு: .................. (அங்குலம்-ஆண்)

நிறை: ................... (கி.கி.)

10. நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம்: ...................................

11. மாவட்டம்: ........................................................

12. வாக்கெடுப்புப் பிரிவு: ..........................................

13. கிராம அலுவலர் பிரிவு: .............................................

14. தொலைபேசி இல.: ...........................................

15. வட்ஸ்அப் (whatsApp) இல.: .............................................

16. சிவில் அந்தஸ்து: .......................................................

17. பால்: .........................................................

18. கல்வி கற்ற பாடசாலைகள் (ஒழுங்கு வரிசைப்படி) : ............................

19. பாடசாலை/ பாடசாலைகள் அல்லது பல்கலைக்கழகங்கள் பற்றிய விபரங்கள்:

| *பாடசாலை/ பல்கலைக் கழகத்தின் பெயர்* | *சித்தியடைந்த பரீட்சை* | *பரீட்சைக்குத் தோற்றிய வருடம்* | *சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட)* |
|---|---|---|---|
| | க.பொ.த (சா.த.):<br>க.பொ.த (உ.த.):<br>வேறு: | | |

20. பாடசாலையிலிருந்து / பல்கலைக்கழகத்திலிருந்து விலகியதன் பின் பின்பற்றிய பாடநெறிகள், புரிந்த தொழில்கள் பற்றிய விபரங்கள்:

| *தொழில் தருநரின் பெயரும் முகவரியும்* | *பாடநெறியின் / தொழிலின் தன்மை* | *சேவைக் காலம்* | |
|---|---|---|---|
| | | *இலிருந்து* | *வரை* |
| | | | |

21. பெற்றோர் பற்றிய விபரங்கள்:

| *முழுப் பெயர்* | *பிறந்த இடம்* | *தொழில்* | *தற்போதைய முகவரி* |
|---|---|---|---|
| தந்தை<br>தாய் | | | |

22. பதவிக்காக உள்ள சிறப்புத் தகைமைகள்:
..........................................................................................................................................................................
..........................................................................................................

23. விளையாட்டில் தற்போது காட்டியுள்ள சாதனைகள்/ திறமைகள் பற்றிய விபரங்கள்: (நீங்கள் பங்குபற்றிய போட்டிகள் மற்றும் விளையாட்டுக் குழுக்களை திகதிகளுடனும் பெற்ற சாதனைகளுடனும் குறிப்பிடுக.)
..........................................................................................................................................................................
..........................................................................................................

24. பாடசாலையில்/ பல்கலைக்கழகத்தில் அல்லது வெளி அமைப்புகளில் காட்டிய பிற சாதனைகள் (திகதிகளுடன் பெற்ற சாதனைகளை குறிப்பிடுக.): ............................

25. ஆயுதப் படையில் அல்லது தொண்டர் படையில் அல்லது மாணவர் படையணியில் அல்லது சாரணர் இயக்கத்தில் ஆற்றியுள்ள சேவை:: ............................

26. இலங்கைக் கடற்படையில் அல்லது ஆயுதப் படையில் அல்லது பொலிஸ் சேவையில் இணைவதற்காக நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்துள்ளீரா? அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களையும், இறுதியில் அதற்கு என்ன நடந்தது என்பதனையும் குறிப்பிடுக.: ............................

27. நீங்கள் இதற்கு முன்பு இராணுவம், விமானப்படை மற்றும் கடற்படையில் பணியாற்றியுள்ளீர்களா? அவ்வாறு பணியாற்றியிருப்பின் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக.

28. சிவில் நீதிமன்றமொன்றில் நீங்கள் குற்றவாளியாக்கப்பட்டு அல்லது பிணை வழங்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின், அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுக.: ...........................

29. இராணுவ நீதிமன்றமொன்றில் நீங்கள் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?: ...........................

30. அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது அரச துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனமொன்றில் (மத்திய வங்கி/ தேசிய வங்கிகள்/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டு முயற்சிகள், கம்பனிகள் உட்பட) சேவையில் ஈடுபட்டிருந்திருப்பின் சேவையை முடிவுறுத்துவதற்கான காரணங்கள்:: ...........................

31. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| *பெயர்* | *பதவிப் பெயர்* | *அஞ்சல் முகவரி* |
|---|---|---|
| | | |

32. விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப்பட வேண்டிய வெளிப்படுத்தல்:

மேலே என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானதும் சரியானதும் என நேர்மையுடன் உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை நிரந்தர கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவிற்கு தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பாக கடைப்பிடிக்கப்படுகின்ற நடவடிக்கை முறைகளையும், அவற்றுடன் தொடர்புடைய விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து விளங்கிக் கொண்டேன்.

திகதி : ..................................

.......................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

உங்களால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பதிவு அஞ்சல் மூலம் (குறித்த தொடர்புடைய ஆவணங்களின் நகல்களுடன்) கீழுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

சிரேஷ்ட பணிப்பாளர் அதிகாரி ( ஆட்சேர்ப்பு ),
கடற்படைத் தலைமையகம்,
அஞ்சல் பெட்டி 593,
கொழும்பு 01.

மேலதிக விபரங்களுக்கு : தொலைபேசி 011-7195155,011-7195162 மொபைல்:076-0275685

10-263/1

## இலங்கைக் கடற்படை

### இலங்கைத் தொண்டர் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவுக்கு கப்பற்றுறை தொழில்வினைஞர்களை நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வெற்றிடங்கள்

1. இலங்கைத் தொண்டர் கடற்படையின் தொழில் வினைஞர் பிரிவுக்கு ஆண் கப்பற்றுறை தொழில் வினைஞர்களை நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அதற்கமைய, பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலங்கைத் தொண்டர் கடற்படையில் இணைவதற்கு, விண்ணப்பதாரிகள் பின்வரும் பொது நிபந்தனைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அ. குடியுரிமை – இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ஆ. வயது – 2025, கார்த்திகை மாதம் 06 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும், 33 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
இ. உயரம் – ஆண் 5' 4" (162.56 செ.மீ.)
ஈ. உடல் திணிவுச் சுட்டி – 17- 27
உ. மார்பு – ஆண் 32" (81.28 செ.மீ.)
ஊ. வண்ணப் பார்வை – STD II
எ. தூரப் பார்வை – 6/6 (மூக்குக் கண்ணாடி/ வில்லை இன்றி).

(6/12 பார்வைக் கூர்மை மூக்குக் கண்ணாடி மூலம் 6/6 என சரிசெய்து கொண்டுள்ள விண்ணப்ப தாரிகள் சம்பந்தமாக பரிசீலிக்கப்படும்).

ஏ. சிவில் அந்தஸ்து – திருமணமான/ திருமணமாகாத இரு தரப்புகளும் விண்ணப்பிக்கலாம்.

2. **ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பிரிவு**: கப்பற் கட்டுமான தொழில்வினைஞர் - (கப்பலின் உடற்பகுதி (Hull) பழுதுபார்த்தல் மற்றும் கப்பற் கட்டுமான பொறியியல் தொழில்வினைஞர்).

3. **கல்வித் தகைமைகள் :**

அ. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு கணிதம், விஞ்ஞானம் மற்றும் தாய்மொழி ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்தியுடனும், ஆங்கில மொழிக்கு சாதாரண சித்தியுடனும் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில்-

(1) பௌதீகவியல் பிரிவு அல்லது உயிரியல் பிரிவு - பௌதீகவியல் பாடத்திற்கு குறைந்தபட்சம் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் கட்டாய மாகும் என்பதுடன், அத்துடன் இணைந்த கணிதம், உயிரியல், இரசாயனவியல் அல்லது ஏதாவதொரு தொழில்நுட்பப் பாடத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) தொழில்நுட்பப் பாடப் பிரிவு - தொழில்நுட்ப வியலுக்கான விஞ்ஞானம் மற்றும் பொறியியல் தொழில்நுட்பவியல் பாடத்திற்கு குறைந்தபட்சம் சாதாரண சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4. **தொழில்சார் தகைமைகள் :**

அ. **கப்பற் கட்டுமான தொழில்வினைஞர் (வகுப்பு II)**

(1) NVQ V மட்டத்திற்குச் சமமான எந்திரவியல் பொறியியில் டிப்ளோமா கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

**விசேட தகைமைகள் :**

(அ) எந்திரவியல் பொறியியல் துறையில் உயர் தேசிய டிப்ளோமா (HND) கற்கைநெறியை அல்லது அதற்குச் சமமான டிப்ளோமா கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஆ) எந்திரவியல் பொறியியல் துறையில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) கற்கைநெறியை அல்லது அதற்குச்சமமான டிப்ளோமா கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(இ) மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் NVQ V மட்டத்தில் எந்திரவியல் பொறியியல் துறையில் டிப்ளோமா கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

மற்றும்

(2) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது தனியார் நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் நான்கு (04) வருட அல்லது அதற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

ஆ. **கப்பற் கட்டுமான தொழில்வினைஞர் (வகுப்பு III)**

(1) NVQ V மட்டத்திற்குச் சமமான எந்திரவியல் பொறியியில் டிப்ளோமா கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

**விசேட தகைமைகள் :**

(அ) எந்திரவியல் பொறியியல் துறையில் உயர் தேசிய டிப்ளோமா (HND) கற்கைநெறியை அல்லது அதற்குச் சமமான டிப்ளோமா

கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஆ) எந்திரவியல் பொறியியல் துறையில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) கற்கைநெறியை அல்லது அதற்குச் சமமான டிப்ளோமா கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(இ) மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் NVQ V மட்டத்தில் எந்திரவியல் பொறியியல் துறையில் டிப்ளோமா கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

மற்றும்

(2) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது தனியார் நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் மூன்று (03) வருட அல்லது அதற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

இ. **கப்பல் கட்டுமான தொழில்வினைஞர் (வகுப்பு IV)**

(1) NVQ V மட்டத்திற்குச் சமமான எந்திரவியல் பொறியியில் டிப்ளோமா கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

**விசேட தகைமைகள் :**

(அ) எந்திரவியல் பொறியியல் துறையில் உயர் தேசிய டிப்ளோமா (HND) கற்கைநெறியை அல்லது அதற்குச் சமமான டிப்ளோமா கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஆ) எந்திரவியல் பொறியியல் துறையில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) கற்கைநெறியை அல்லது அதற்குச் சமமான டிப்ளோமா கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(இ) மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் NVQ V மட்டத்தில் எந்திரவியல் பொறியியல் துறையில் டிப்ளோமா கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

மற்றும்

(2) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது தனியார் நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் மூன்று (03) வருட அல்லது அதற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

ஈ. **கப்பல் கட்டுமான தொழில்வினைஞர் (தரம் I)**

(1) ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற போது NVQ V மட்டத்திற்குச் சமமான எந்திரவியல் பொறியியில் டிப்ளோமா கற்கைநெறியொன்றைக் கற்றுக் கொண்டிருத்தல் அல்லது அதற்குச் சமமான தகைமையைக் கொண்ட கற்கைநெறியொன்றின் இறுதியாண்டு மாணவனாகக் கற்றுக் கொண்டிருத்தல்.

**விசேட தகைமைகள் :**

(அ) எந்திரவியல் பொறியியல் துறையில் உயர் தேசிய டிப்ளோமா (HND) கற்கைநெறியை அல்லது அதற்குச் சமமான டிப்ளோமா கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஆ) எந்திரவியல் பொறியியல் துறையில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) கற்கைநெறியை அல்லது அதற்குச் சமமான டிப்ளோமா கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(இ) மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் NVQ V மட்டத்தில் எந்திரவியல் பொறியியல் துறையில் டிப்ளோமா கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

(2) சம்பந்தப்பட்ட துறையில் அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை.

5. மேற்படி 3 மற்றும் 4 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சையின் போது உயரம், கண்பார்வை, உடல் நிறை என்பன பரீட்சிக்கப்படும். வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அளவீடுகளுக்கு அமைய உயரம், கண்பார்வை மற்றும் உடல் நிறை இல்லாத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு முன்னிலைப்படுத்தப்படமாட்டார்கள். எவரேனுமொரு விண்ணப்பதாரியின் உயரம் உரிய அளவில் இல்லாதிருப்பினும்கூட, அவரிடம் கடற்படைக்கு நன்மை பயக்கும் திறன்/ஆற்றல் காணப்படுமாயின்,

கடற்படைத் தளபதியின் அங்கீகாரத்துக்குக் கட்டுப்பட்டு அவ்விண்ணப்பதாரி பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.

6. **சேவை நிபந்தனைகள் :**

அ. விண்ணப்பதாரிகள், தொழில்வினைஞர் பிரிவில் II, III, IV ஆம் வகுப்புகளைச் சேர்ந்த மற்றும் I தரத்தைச் சேர்ந்த கப்பற்றுறை தொழில்வினைஞர்களாக, அடிப்படை சேவைக் காலமாக 05 ஆண்டுகளுக்கு, தொண்டர் கடற்படைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள் என்பதுடன், அவர்கள் 03 மாத அடிப்படைப் பயிற்சி நெறியொன்றைப் பின்பற்றுதலும் வேண்டும்.

ஆ. பயிலுநர்களாக பயிற்சி பெறும் காலப்பகுதியிலும் அதன் பின்னரும், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கப்பற்றுறை தொழில்வினைஞர்கள் கடற்படைச் சட்டத்திற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

இ. ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட எல்லா கப்பற்றுறை தொழில்வினைஞர்களுக்கும் எல்லா வசதி களுடன் சீருடைகளும் வழங்கப்படும்.

ஈ. பயிற்சிக் காலத்தின் போது, ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கப்பற்றுறை தொழில்வினைஞர்களுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகளும் கடற்படையினால் வழங்கப்படும்.

உ. பயிற்சி பெறும் காலப்பகுதியில், எவரேனுமொரு கப்பற்றுறை தொழில்வினைஞருக்கு சுய விருப்புடன் கடற்படையிலிருந்து விலகுவதற்குத் தேவைப்பட்டால், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு கடற்படை தொழில்வினைஞர் சார்பில் அது வரை மேற்கொண்ட அனைத்து செலவினங்களையும், சம்பந்தப்பட்ட கப்பற்றுறை தொழில்வினைஞர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

ஊ. எல்லா கப்பற்றுறை தொழில்வினைஞர்களும் கடமை நிமித்தம் அல்லது பயிற்சிக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையின் எப்பாகத்திற்கும் அல்லது வெளிநாட்டிற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள் :**

தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் கீழ் அரசகரும மொழிக் கொள்கை யினை நடைமுறைப்படுத்தும் வகையில் தற்போது அமுலிலுள்ள, அதேபோன்று இனிவருங் காலங்களில் விதிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகள் மற்றும் நியதிச்சட்டங்கள் என்பவற்றுக்கு இணங்கியொழுகி செயற்படுதல் வேண்டும்.

8. **சம்பளமும் கொடுப்பனவுகளும்:**

05/2025 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2025.04.01 ஆம் திகதியிலிருந்து சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்படும். அதற்கமைய,

அ. அடிப்படைச் சம்பளம் – ரூ. 49,197.00

ஆ. வாழ்க்கைச் செலவுப்படி – ரூ.17,800.00

இ. சீருடை பேணுதல் கொடுப்பனவு – ரூ. 350.00

ஈ. கஷ்டப் பிரதேச கொடுப்பனவு (நடவடிக்கை பிரதேசங்களின் பொருட்டு) – அடிப்படைப் பயிற்சியின் பின் உரித்தாகும்.

உ. கஷ்டப் பிரதேச கொடுப்பனவு (நடவடிக்கை சேவையல்லாத பிரதேசங்களின் பொருட்டு) – அடிப்படைப் பயிற்சியின் பின் உரித்தாகும்.

ஊ. ஏனைய கொடுப்பனவு – விசேட கொடுப்பனவு – ரூ. 1,000.00
விசேட மேலதிக கொடுப்பனவு – ரூ. 2,400.00

எ. மொத்த சம்பளம் – ரூ 70,747.00

ஏ. உணவுக் கொடுப்பனவு உட்பட (சந்தர்ப்பத்திற்கு அமைய) – ரூ 29,025.00

**மொத்தச் சம்பளம்:** அண்ணளவாக (பங்கீட்டுக் கொடுப்பனவு உட்பட) – ரூ. 99,772.00

ஐ. இலவசமாக புகையிரதத்தில் பயணிக்கக்கூடியவாறு ஒரு வருடத்திற்கு மூன்று சோடி புகையிரத ஆணைச்சீட்டுகள் (ஏற்புடையவாறு கப்பற்றுறை தொழில்வினைஞருக்கு, வாழ்க்கைத் துணைக்கு, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப்போருக்கு) உரித் தாகும்.

ஒ. முகாமில் தங்கியிருக்கும் கப்பற்றுறை தொழில் வினைஞர்களுக்கு மாதத்திற்கு ஒரு தடவை என்றவாறு, விடுதியிலிருந்து தனது வீட்டிற்குப் போய்வருவதற்கு, மேலதிகமாக ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டு அல்லது பேரூந்து வண்டி கட்டணம் செலுத்தப்படும்.

ஓ. இலவசமாக மருத்துவ வசதிகள் வழங்கப்படும். (ஏற்புடையவாறு கப்பற்றுறை தொழில்வினை ஞருக்கு, வாழ்க்கைத் துணைக்கு, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப்போருக்கு).

ஔ. அரசாங்க விடுதிகளில் தங்கியிராத திருமணமான கப்பற்றுறை தொழில்வினைஞர்களுக்கு வீட்டு வாடகைக் கொடுப்பனவாக ரூ. 2,400.00 இலிருந்து ரூ. 6,600.00 வரை வழங்கப்படும்.

ஃ. திருமணமான கப்பற்றுறை தொழில்வினைஞர் களுக்காக திருமணமானோர் தங்குமிடங்களில்

வெற்றிடங்கள் ஏற்படும் போது அதற்கமைவாக விடுதிகள் வழங்கப்படும். இதற்கான வாடகை அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையவாறு வசூலிக்கப்படும்.

9. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்:**

அ. விண்ணப்பதாரிகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பப் படிவத்தில் உள்ள எல்லாப் பந்திகளையும் முடியுமான விபரங்களுடன், தமது கையெழுத்தில் தெளிவாகப் பூர்த்தி செய்தல் வேண்டும். மேற்படி சரியாகவும், தெளிவாகவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை, 2025 ............ மாதம் ... ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, “சிரேஷ்ட பதவி நிலை அலுவலர் (ஆட்சேர்ப்பு), கடற்படைத் தலைமையகம் த.பெ. இல. 593, கொழும்பு” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “இலங்கைத்தொண்டர் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவுக்கு நேரடியாக கப்பற் துறை தொழில்வினைஞர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்” எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரத்திற்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும், இவ் அறிவித்தலில் காட்டப்பப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ற விதத்தில் அமையாத விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இது தொடர்பான மேலதிக விபரங்களை www.navy.lk இணையத்தளத்தில் அல்லது 011-7195155, 011-7195162, 076-0275685 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனங்களில்/ சபை களில்/ சிவில் நிறுவனங்களில் சேவையில் ஈடு பட்டுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள், தமது திணைக்கள/ கூட்டுத்தாபன/ சபை/ நிறுவனத் தலைவர்கள் ஊடாக, தெரிவு செய்யப்பட்டால் விடுவிக்க முடியுமென்ற அத்தாட்சியுடன் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

இ. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக் கப்படும் போது அல்லது வேறு சந்தர்ப்பங்களில் அழைக்கப்படும் போது, பின்வரும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ்.

(2) விண்ணப்பித்த பிரிவுக்கு ஏற்புடையதான கல்வித் தகைமைகள் காணப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதற்கு கல்விச் சான்றிதழ்கள்.

(3) பாடசாலை விடுகைச் சான்றிதழ்.

(4) ஆறு (06) மாத காலப் பகுதிக்கு உட்பட்டதாக பெறப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்.

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட தொழில்/ தொழில்நுட்பப் பயிற்சிச் சான்றிதழ் மற்றும் அனுபவம் இருப்பின் அதற்கான சான்றிதழ்கள்.

(6) சமீபத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மூன்று நற் சான்றிதழ்கள். அவற்றுள் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரால் வழங்கப்பட்ட சான்றிதழாக இருத்தல் வேண்டும். மற்றைய சான்றிதழ்கள் இரண்டு வருடங்களுக்கும் மேலாக விண்ணப்பதாரியை நன்கு தெரிந்த அறிமுகமான பொறுப்புவாய்ந்த ஒருவரினால் வழங்கப்பட்ட சான்றிதழாகவும், தற்போதைய தொழில் தருநர் ஒருவரினால் (தொழில் செய்பவராயின்) வழங்கப்பட்ட சான்றிதழாகவும் இருத்தல் வேண்டும்.

(7) விளையாட்டுத்துறை மற்றும் ஏனைய செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள்.

ஈ. ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

உ. சம்பந்தப்படாத வேறு ஆவணங்களையோ அல்லது ஆவணங்களின் மூலப்பிரதிகளையோ விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் கூடாது.

ஊ. விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை அனுப்பி, அவை காணாமல் போன பிறகு கடற்படை பொறுப்புக் கூறாது.

10. விண்ணப்பப்படிவத்தில் பொய்யான கூற்றுக்களை வெளிப்படுத்துதல், அத்தகைய பொய்யான கூற்று விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரிய வருமாயின், அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரிய வருமாயின் அவரை சேவையிலிருந்து நீக்குவதற்கும் உட்படும்.

11. **தெரிவு செய்தல்/ நேர்முகப் பரீட்சை முதலியன:**

அ. மேற்கூறப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் இலங்கை கடற் படையினால் நடாத்தப்படுகின்ற அடிப்படை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு,

அதில் தேர்ச்சியடைந்த பின் தேர்வுச் சபையினால் நடாத்தப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அந்நேர்முகப் பரீட்சையில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரிகள் மாத்திரம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள உடல் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சையில் தேர்ச்சியடைதல் வேண்டும்.

ஆ. உடல் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சையில் தேர்ச்சியடைவதற்கான தேவைப்பாடுகள்:

| *உடற்பயிற்சி நிகழ்ச்சி* | *நேரம் (நிமிடம்/ நொடிகள்)* | *ஆண்* |
|---|---|---|
| 1600 மீற்றர் ஓட்டம் | 09 நிமிடம் | |
| தள்ளுதல்(Push up) | 01 நிமிடம் | 12 தடவை அல்லது அதற்கு மேல் |
| இருத்தல் (Sit up) | 01 நிமிடம் | 10 தடவை அல்லது அதற்கு மேல் |

இ. உடற் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மட்டுமே கடற்படை மருத்துவ சபை முன் தோற்றுதல் வேண்டும் என்பதுடன், அதில் தகுதிபெறும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் இலங்கை தொண்டர் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவுக்கு கப்பற்துறை தொழில்வினைஞர்களாக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

ஈ. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி, நேரம், இடம் முதலான விபரங்கள், அவர்களினால் வழங்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு வட்ஸ்எப் (whatsApp) மூலம் மட்டும் அறிவிக்கப்படும் என்பதுடன், தபால் மூலமாக அல்லது வேறு எந்தவொரு முறை மூலமாகவும் அறிவிக்கப்படமாட்டாது. மேலும், நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளித்தல் தொடர்பாக பிரயாணச் செலவுகளோ அல்லது வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்படவும் மாட்டாது.

உ. விண்ணப்பிக்கப்பட்ட பதவி சம்பந்தமாக விண்ணப்பதாரியொருவர் அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டையை விண்ணப்பதாரி சமர்ப்பித்தல் வேண்டும்.

ஊ. விண்ணப்பதாரிகளை சிபாரிசு செய்வதற்கு எண்ணுகின்ற எவரொருவராயினும், அவருக்கு நற்சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலமே சிபாரிசு செய்தல் வேண்டும். விண்ணப்பதாரிகளை தெரிவு செய்வதற்கு எவ்விதத்திலேனும் தூண்டுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் விண்ணப்பதாரிகளை தகுதியிழக்கச் செய்யும்.

எ. ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகைமை பெறாத விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

ஏ. விண்ணப்பதாரிகளினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் சம்பந்தமான சான்றிதழ்கள், பரீட்சைத் திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் அவற்றின் நம்பகத்தன்மை உறுதி செய்துகொள்ளப்படும்.

ஐ. எல்லா விண்ணப்பதாரிகளினதும் பாதுகாப்பு இசைவு அறிக்கைகள் (Security clearance reports), இலங்கை கடற்படைத் தலைமையகத்தினால் மீள் பரீட்சித்தலுக்காக சமர்ப்பிக்கப்படும்.

ஒ. இலங்கைக் கடற்படைக்கு விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் தொழிற்பாடு தொடர்பான இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் இலங்கைக் கடற்படைத் தளபதிக்கு உரியது. மேலும், தேசிய பாதுகாப்பு, இலங்கைக் கடற்படையின் நடவடிக்கை மற்றும் நிருவாகத் தேவைகளுக்கு ஏற்ப மேற்குறித்த தேவைகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றங்களைச் செய்வதற்கான இறுதி முடிவெடுக்கும் அதிகாரமும் இலங்கைக் கடற்படைத் தளபதிக்கு உரியது.

*குறிப்பு*: இவ் வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப் படுவதுடன். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படின், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான வாசகம் மேலோங்கி நிற்கும்.

பீஏகேஎஸ்பி பானகொட, ஆர்எஸ்பி, யூஎஸ்பி, என்டீசீ, பிஎஸ்சீ
வைஸ் அத்மிரால்,
இலங்கைக் கடற்படை தளபதி.

இலங்கைக் கடற்படைத் தலைமையகம்,
த.பெ. இல. 593,
கொழும்பு 01.

**இலங்கை தொண்டர் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவுக்கு கப்பற்துறை தொழில்வினைஞர்களை நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம்**

1. குடியுரிமை: ..................................................................................

(இலங்கை பிரஜையாவது, வம்சாவளியிலா அல்லது பதிவு மூலமா என்பதைக் குறிப்பிடுக. பதிவு மூலமாயின் சம்பந்தப்பட்ட சான்றிதழின் திகதியையும் இலக்கத்தையும் குறிப்பிடுக).

2. விண்ணப்பிக்கும் பிரிவு (முன்னுரிமை அடிப்படையில்):

3. முழுப் பெயர் (தேசிய அடையாள அட்டையின் படி):

4. தேசிய ஆளடையாள அட்டை இல.:

5. நிரந்தர முகவரி:

6. அஞ்சல் முகவரி:

7. பிறந்த திகதி: ......................................

8. வயது: (2025 .................. மாதம்……….. ஆந் திகதிக்கு)

வருடங்கள் : ...... மாதங்கள் : ...... நாட்கள்: ......

9. உயரம்: ........................ (அங்குலம்)

மார்பு: .................. (அங்குலம்)

நிறை: ................... (கி.கி.)

10. நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம்: ...................................

11. மாவட்டம்: ........................................................

12. வாக்கெடுப்புப் பிரிவு: ..........................................

13. கிராம அலுவலர் பிரிவு: ............................................

14. தொலைபேசி இல.: ...........................................

15. வட்ஸ்அப் (whatsApp) இல.: ............................................

16. சிவில் அந்தஸ்து: ......................................................

17. பால்: .........................................................

18. கல்வி கற்ற பாடசாலைகள் (ஒழுங்கு வரிசைப்படி): .........................................................

19. பாடசாலை/ பாடசாலைகள் அல்லது பல்கலைக்கழகங்கள் பற்றிய விபரங்கள்:: .........................................................

| *பாடசாலை/ பல்கலைக்கழகத்தின் பெயர்* | *சித்தியடைந்த பரீட்சை* | *பரீட்சைக்குத் தோற்றிய வருடம்* | *சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட)* |
|---|---|---|---|
| | க.பொ.த.(சா./த.):<br>க.பொ.த.(உ./த.):<br>வேறு: | | |

20. பாடசாலையிலிருந்து / பல்கலைக்கழகத்திலிருந்து விலகியதன் பின் பின்பற்றிய பாடநெறிகள், புரிந்த தொழில்கள் பற்றிய விபரங்கள்:

| *தொழில் தருநரின் பெயரும் முகவரியும்* | *பாடநெறியின் / தொழிலின் தன்மை* | *சேவைக் காலம்* | |
|---|---|---|---|
| | | *இலிருந்து* | *வரை* |
| | | | |

21. பெற்றோர் பற்றிய விபரங்கள்:

| *முழுப் பெயர்* | *பிறந்த இடம்* | *தொழில்* | *தற்போதைய முகவரி* |
|---|---|---|---|
| தந்தை<br>தாய் | | | |

22. பதவிக்காக உள்ள விசேட தகைமைகள்:
......................................................................................................................................................................................
..........................................................................................................

23. விளையாட்டில் தற்போது காட்டியுள்ள சாதனைகள்/ திறமைகள் பற்றிய விபரங்கள்: (நீங்கள் பங்குபற்றிய போட்டிகள் மற்றும் விளையாட்டுக் குழுக்களை திகதிகளுடனும் பெற்ற சாதனைகளுடனும் குறிப்பிடுக.)
......................................................................................................................................................................................
..........................................................................................................

24. பாடசாலையில்/ பல்கலைக்கழகத்தில் அல்லது வெளி அமைப்புகளில் காட்டிய பிற சாதனைகள்: (திகதிகளுடன் பெற்ற சாதனைகளை குறிப்பிடுக.)

25. ஆயுதப் படையில் அல்லது தொண்டர் படையில் அல்லது மாணவர் படையணியில் அல்லது சாரணர் இயக்கத்தில் ஆற்றியுள்ள சேவை:

26. இலங்கைக் கடற்படையில் அல்லது ஆயுதப் படையில் அல்லது பொலிஸ் சேவையில் இணைவதற்காக நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்துள்ளீரா? அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களையும், இறுதியில் அதற்கு என்ன நடந்தது என்பதனையும் குறிப்பிடுக.

27. நீங்கள் இதற்கு முன்பு இராணுவம், விமானப்படை மற்றும் கடற்படையில் நிரந்தர அல்லது தொண்டர் படைப் பிரிவுகளில் பணியாற்றியுள்ளீர்களா? அவ்வாறு பணியாற்றிருப்பின் பணியாற்றிய காலப்பகுதி, வகித்த பதவி பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக.

28. சிவில் நீதிமன்றமொன்றில் நீங்கள் குற்றவாளியாக்கப்பட்டு அல்லது பிணை வழங்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின், அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுக.

29. இராணுவ நீதிமன்றமொன்றில் நீங்கள் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

30. அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது அரசாங்க துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனமொன்றில் (மத்திய வங்கி/ தேசிய வங்கிகள்/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டு முயற்சிகள், கம்பனிகள் உட்பட) சேவையில் ஈடுபட்டிருந்திருப்பின் சேவையை முடிவுறுத்துவதற்கான காரணங்கள்:

31. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| *பெயர்* | *பதவிப் பெயர்* | *அஞ்சல் முகவரி* |
|---|---|---|
| | | |

32. விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப்பட வேண்டிய வெளிப்படுத்தல்:

மேலே என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானதும் சரியானதும் என நேர்மையுடன் உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை தொண்டர் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவிற்கு தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பாக கடைபிடிக்கப்படுகின்ற நடவடிக்கை முறைகளையும், அவற்றுடன் தொடர்புடைய விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து விளங்கிக் கொண்டேன்.

திகதி : ................................... ........................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

உங்களாள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பதிவு அஞ்சல் மூலம் (குறித்த தொடர்புடைய ஆவணங்களின் நகல்களுடன்) முகவரிக்கு அனுப்பவும்.

மூத்த பணிப்பாளர் அதிகாரி ( ஆட்சேர்ப்பு )
கடற்படை தலைமையகம்,
அஞ்சல் பெட்டி 593,
கொழும்பு 01.

மேலதிக விபரங்களுக்கு : தொலைபேசி 011-7195155, 011-7195162 மொபைல்:076-0275685

10-263/2

## பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைக் குழு

## சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கு தரம் II இல் பல் அறுவை சிகிச்சை நிபுணர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் – 2024

பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைக் குழுவின் கட்டளையின் பேரில், 2024.10.11 ஆம் திகதிய 1887/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைச் சுகாதார சேவை மருத்துவ சேவை பிரமாணக் குறிப்பின்படி, பல் அறுவை சிகிச்சை நிபுணர் (தரம்II) பதவியில் நிலவும் 158 வெற்றிடங்களில் சேவை முன்னுரிமையின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட 64 பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு, இங்குள்ள பந்தி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள பட்டதாரி பல் அறுவைச் சிகிச்சை நிபுணர்களிடமிருந்து சுகாதார அமைச்சினால் விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவிப்பின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வெற்றிடப் பட்டியல் மற்றும் விருப்பத் தேர்வு அறிவிப்புக்கான படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், 2025, ஒற்றோபர் 23 ஆம் திகதியன்று குடும்ப சுகாதாரப் பணியகத்தின் கேட்போர் கூடத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். உங்கள் சான்றிதழ்களைச் சரிபார்ப்பதற்கும், சேவை நிலையங்களுக்கான விருப்பங்களைக் குறிப்பதற்கும் உங்களுக்கு உதவுவதற்காக. பணிப்பாளர் (பல் மருத்துவ சேவைகள்) அலுவலகத்தின் பணியாளர்கள் குறிப்பிட்ட திகதியில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை அந்த நிலையத்தில் இருப்பார்கள். மேலும் தகவலுக்கு பணிப்பாளர் (பல் மருத்துவ சேவைகள்) அலுவலகத்தை தொலைபேசி இல. 0112-692846 ஊடாக தொடர்பு கொள்ள முடியும்.

02. இந்தப் பதவிக்கான சம்பள அளவு பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 10/2025 இன் படி, மாதந்தோறும் ரூ.91, 750 – 3 x 2, 400 – 7 x 2, 420 – 2 x 2, 940 – 16 x 3, 900 -ரூ.184,170 (SL 2- 2025) ஆகும். மேலும், பொது மற்றும் திணைக்கள சுற்றறிக்கையின் விதிமுறைகளின்படி வழங்கப்படும் கொடுப்பனவுகளும் இதில் உள்ளடங்கும். எவ்வாறாயினும், இந்த சம்பள அளவின் 04 ஆவது சம்பள படியை அடைவதற்கு முன்பு முதலாவது வினைத்திறன் தடை பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

03. இந்தப் பதவி நிரந்தரமானதும் மற்றும் ஓய்வூதியம் பெறக்கூடியதுமாகும். உங்களுக்கு உரிமையுள்ள ஓய்வூதியத் திட்டம் குறித்து அரசாங்கத்தினால் எதிர் காலத்தில் எடுக்கப்படும் கொள்கை தீர்மானங் களுக்கு நீங்கள் உட்பட்டவராக இருப்பீர்கள். மேலும், உங்கள் நியமனம், நீங்கள் நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்துக்கு உட்பட்டதாக இருக்கும். உங்கள் நியமனமானது பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைகள், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், தாபன விதிக்கோவையின் விதிகள், நிதிப் பிரமாணங்கள் மற்றும் அரசாங்கத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் பிற விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கு உட்பட்டதாக இருக்கும். நீங்கள் நியமனம் பெற்ற திகதியிலிருந்து 05 ஆண்டுகள் முடிவதற்குள், 2020.10.16 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 18/2020 இன் விதிகளின்படி, அரசகரும மொழியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும். இல்லையெனில், உங்கள் சம்பள உயர்வுகள் இடைநிறுத்தப்படும்.

04. இந்தப் பதவிக்கான ஆட்சேர்ப்புக்கான தகுதிப் பட்டியல், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பல் மருத்துவ விஞ்ஞான பீடத்தில் பல் அறுவைச் சிகிச்சையில் பட்டப்படிப்பைப் பெற்ற பல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் தொடர்பாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவ விஞ்ஞான பீடத்தினால் வெளியிடப்படும் தகுதிப் பட்டியலின் அடிப்படையிலும் மற்றும் பல் அறுவைச் சிகிச்சையில் வெளிநாட்டுப் பட்டம் பெற்றவர்கள் தொடர்பாக இலங்கை மருத்துவ கவுன்சிலால் வெளியிடப்படும் தகுதிப் பட்டியலின் அடிப்படையிலும் தயாரிக்கப்படும்.

05. பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் இலங்கைச் சுகாதார சேவையின் மருத்துவ சேவை பிரமாணக் குறிப்பின் ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி கவனத்தில் கொள்ளப்படும்.

06. விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் பிரதி களை விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும். மேலும் அவற்றின் மூலப்பிரதிகள் 2025, ஒற்றோபர் 23 ஆம் திகதியன்று சரிபார்ப்புக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(அ) கையொப்பம் இடுவதன் மூலம் சான்றளிக்கப் பட்ட முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண் ணப்பம் மற்றும் விருப்பங்களை அறிவிப்பதற் கான படிவம்.

(ஆ) பிறப்புச் சான்றிதழின் 03 பிரதிகள்.

(இ) இலங்கை மருத்துவ கவுன்சிலின் பதிவுச் சான்றிதழின் 03 பிரதிகள்.

(ஈ) இரு பக்கங்களையும் உள்ளடக்கியதாக தேசிய அடையாள அட்டையின் 03 பிரதிகள்

07. விண்ணப்பதாரர்கள் தகுதிப் பட்டியல், வெற்றிடப் பட்டியல், தரம் II பல் அறுவைச்சிகிச்சை நிபுணர் களுக்கான ஆட்சேர்ப்பு அறிவிப்பு மற்றும் விருப்பத் தேர்வுகளை அறிவிக்கும் படிவத்தை www.health.gov.lk என்ற இணையத்தளத்தில் இருந்தோ அல்லது பணிப்பாளர் (பல் மருத்துவ சேவைகள்) அலுவல கத்திலிருந்தோ பெற்றுக் கொள்ள முடியும்.

08. விருப்பத் தேர்வுகளை அறிவிப்பதற்கான படிவத்தில் அவர்களது விருப்பமான சேவை நிலையத்தைக் குறிக்கும்போது, அனைத்து விண்ணப்பதாரர்களும் தமது தகுதி எண்ணுக்குச் சமமான சேவை நிலையங்களை அல்லது அதற்கு மேற்பட்ட சேவை நிலையம் ஒன்றினைக் குறிக்குமாறு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

இந்த அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே முரண்பாடு காணப்பட்டால், சிங்கள மொழியிலான உரையே மேலோங்கி இருக்கும்.

பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைக் குழுவின் ஆணைப்படி,

டாக்டர் அனில் ஜாசிங்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

VACANCY LIST FOR POST INTENRN APPOINTMENTS - 2024

| *No.* | *NAME OF THE INSTITUTION* |
|---|---|
| 1 | DGH BADULLA HO Resto |
| 2 | DGH BADULLA HO Resto |
| 3 | DGH HAMBANTHOTA HO OMF |
| 4 | DGH NUWARAELIYA DS |
| 5 | DGH NUWARAELIYA HO OMF |
| 6 | DGH POLONNARUWA HO Resto |
| 7 | DGH TRINCOMALEE HO OMF |
| 8 | DH HIGHFOREST PLACED AT BH RIKILLAGASKADA HO ORHTO |
| 9 | TH ANURADHAPURA HO Resto |
| 10 | TH ANURADHAPURA SHO OMF |
| 11 | TH BATTICALOA HO OMF |
| 12 | TH BATTICALOA HO OMF |
| 13 | TH BATTICALOA HO Ortho |
| 14 | TH BATTICALOA SHO Resto |
| 15 | ADC POTHUVIL CENTRAL COLLEGE DS |
| 16 | BH DEHIATHTHAKANDIYA DS |
| 17 | BH DEHIATHTHAKANDIYA DS |
| 18 | DGH AMPARA DS |
| 19 | DGH AMPARA Relief DS |
| 20 | DGH AMPARA Relief DS |
| 21 | DH SENARATHPURA DS |
| 22 | RDHS OFFICE AMPARA Mobile / Relief DS |
| 23 | BH KABITHIGOLLEWA DS |
| 24 | BH MEDAWACHCHIYA DS |
| 25 | DH HURULUWEWA DS |
| 26 | BH MAHIYANGANA DS |
| 27 | BH MAHIYANGANA DS |
| 28 | BH MAHIYANGANA DS |
| 29 | DH ATTAMPITIYA DS |
| 30 | DH BOGAHAKUMBURA DS |
| 31 | DH GIRANDURUKOTTE DS |
| 32 | DH METIGAHATHENNA DS |
| 33 | DH PASSARA DS |
| 34 | MOH PASSARA DS |
| 35 | MOH UVAPARANAGAMA DS |
| 36 | RDHS OFFICE BADULLA Mobile / Relief DS |
| 37 | DH KATARAGAMA DS |
| 38 | BH MALLAVI DS |
| 39 | DH ADDALAICHENAI DS |
| 40 | DH IRAKKAMAM DS |
| 41 | DH VERAVIL DS |
| 42 | DH MAHO DS |
| 43 | RELIEF GALGAMUWA ZONE PLACED AT BH GALGAMUWA Relief DS |
| 44 | BH MURUNKAN DS |
| 45 | DGH MANNAR DS |
| 46 | DGH MANNAR DS |
| 47 | DH THALAIMANNAR DS |
| 48 | RDHS OFFICE MANNAR A RDS |
| 49 | RDHS OFFICE MANNAR Relief DS |
| 50 | DH HANDUNGAMUWA DS |
| 51 | DH LAGGALA PALLEGAMA DS |
| 52 | BH DENIYAYA DS |
| 53 | RDHS OFFICE MONARAGALA Mobile / Relief DS |
| 54 | RDHS OFFICE MONARAGALA RDS |
| 55 | RDHS OFFICE MONARAGALA Relief DS |
| 56 | DH LAXAPANA DS |
| 57 | DH LINDULA DS |
| 58 | RDHS OFFICE NUWARAELIYA Mobile / Relief DS |
| 59 | BH MEDIRIGIRIYA DS |
| 60 | MOH HINGURAKGODA DS |
| 61 | DH NAWAGATHTHEGAMA DS |
| 62 | DH KIRIPORUWA (EHELIYAGODA) RELIEF AT PMCU ELLAWALA DS |
| 63 | DH PADAVI SRIPURA DS |
| 64 | DGH BADULLA |

## தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை வெற்றிடங்கள்

தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் பின்வரும் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிகள் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 01. கனிஷ்ட முகாமையாளர் பதவிகள் | |
| 1.1. சிகிச்சை மற்றும் விசாரணை அதிகாரி ( JM 1-1) | 03 |
| 1.2. போதைப் பொருள் கல்வி மற்றும் தகவல் அதிகாரி (JM 1-1) | 05 |
| 02. அமுலாக்கல்/ செயற்படுத்தும் / திட்ட உத்தியோகத்தர்கள் பதவிகள் | |
| 02.1. உதவிப் போதைப்பொருள் கல்வி மற்றும் தகவல் உத்தியோகத்தர்கள் (MA 5-2) | 05 |
| 03. “முகாமைத்துவ உதவியாளர்” - தொழில் நுட்ப பதவிகள் | |
| 03.1. ஆலோசனை உதவியாளர் (MA 2-1) | 30 |
| 03.2. போதைப்பொருள் கல்வி மற்றும் தகவல் உதவியாளர் (MA 2-1) | 03 |

01.1 பதவியின் பெயர் - சிகிச்சை மற்றும் விசாரணை உத்தியோகத்தர்
சேவை வகுதி - கனிஷ்ட முகாமையாளர் - (JM 1-1)
வெற்றிடங்களின் எண்ணிக்கை - 03

01.1.1 தகைமைகள்

01.1.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்:** பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் பட்ட, பல்கலைக்கழகமொன்றின் சமூக விஞ்ஞானம்/உளவியல்/குற்றவியல்/ சமூகப் பணிகள் போன்ற பாடத்துறை யொன்றில் பட்டமொன்றைப் பெற் றிருத்தல்.

மற்றும்

மேற் கூறிய முதல் பட்டத்தைப் பெற்ற பின்னர் உரிய துறையில் 01 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**01.1.1.2. உள்ளக விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் (பின்வரும் 01 அல்லது 02 அல்லது 03 அல்லது 04)**

01. மேலே குறிப்பிட் வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

02. முகாமைத்துவ உதவியாளர் - தொழில் நுட்பம் அல்லாத சேவை வகுதியில் 11 ஆம் தரத்தில் உரிய துறையின் பதவியில் குறைந்தது 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

03. முகாமைத்துவ உதவியாளர் - தொழில் நுட்ப சேவைப் பிரிவின் 11 ஆம் தரத்தில் உரிய துறையின் பதவியில் குறைந்தது 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

04. அமுலாக்கல்/ செயற்படுத்தல்/ விரிவாக்கல் அதிகாரி சேவைப் பிரிவின் பதவியொன்றில் 08 வருட திருப்தி கரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

01.1.2.1. **வயது :**

22 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரி களுக்கு வயதுக் கட்டுப்பாடு பொருந்தாது.

01.1.2.2. சம்பள குறியீட்டு இலக்கம் - JM 1-1

01.1.2.3. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் - 01.01.2025 ஆம் திகதி முதல்
JM 1-1 மு.சு 01/ 2025 (ரூபா72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - ரூபா122,970.00) (சம்பளத்திற்கு மேலதிகமாக அரசால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் வரப்பிரசாதங்கள் உரித்தாகும்)

01.2. பதவிப் பெயர் - போதைப்பொருள் கல்வி மற்றும் தகவல் அதிகாரி
சேவை வகுதி - கனிஷ்ட முகாமையாளர் - (JM1-1)
வெற்றிடங்களின் எண்ணிக்கை – 05

01.2.1. தகைமைகள் :

01.2.1.1. வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்:

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சமூக விஞ்ஞானங்கள் எனும் பாடத் துறையில் பட்டமொன்றை பெற்றிருத்தல்.

மற்றும்

மேலே குறிப்பிட்ட முதல் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உரிய துறையில் 01 வருட அனுபவம் உடையவராயிருத்தல்.

01.2.1.2. உள்ளக விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் (பின்வரும் 01 அல்லது 02 அல்லது 03 அல்லது 04)

01. மேலே குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

அல்லது

02. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத சேவை வகுதியில் 11 ஆம் தரத்தின் உரிய துறையின் பதவியொன்றில் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

03. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதியில் 11 ஆம் தரத்தின் உரிய துறையின் பதவியொன்றில் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

04. அமுல்படுத்தும்/செயற்படுத்தும்/விரிவாக்கல் அதிகாரி சேவை வகுதியின் பதவியொன்றில் 08 வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

01.2.2. வயது :

22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

01.2.3. சம்பள குறியீட்டு இலக்கம் - JM 1-1

01.2.4. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் - 01.01.2025 திகதி முதல்
மு.சு 01/2025 JM 1-1 (ரூபா 72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - ரூபா 122,970.00)
(சம்பளத்திற்கு மேலதிகமாக அரசால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் வரப்பிரசாதங்கள் உரித்தாகும்)

02.1 பதவிப் பெயர் - உதவி போதைப்பொருள் கல்வி மற்று தகவல் அதிகாரி

சேவை வகுதி - அமுல்படுத்தும்/செயற்படுத்தும் / விரிவாக்க அதிகாரி (MA 5-2)

வெற்றிடங்களின் எண்ணிக்கை – 05

02.1.1. தகைமைகள்

02.1.1.1. வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்
பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சமூக விஞ்ஞானங்கள் எனும் பாடத் துறையில் பட்டமொன்றை பெற்றிருத்தல்

மற்றும்

பதவிக்குரிய துறையில் 01 வருடத்திற்கு குறையாத டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்

02.1.1.2. உள்ளக விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் (பின்வரும் 01 அல்லது 02)
மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

02. தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில் நுட்ப சேவை வகுதியின் பதவியில் 11 ஆம் தரத்தில் உரிய துறையின் பதவியொன்றில் குறைந்தது (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

02.1.2. வயது
22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

02.1.3. சம்பள குறியீட்டு இலக்கம் - MA 5 -2

02.1.4. மாதாந்த சம்பள அளவுத் திட்டம் - 01.01.25 ஆம் திகதி முதல்

மு.சு 01/2025 MA 5-2 (ரூபா 62,310 - 10 x 1,360 -15 x 1,670 - 5 x 2,040 - ரூபா111,160.00)

(சம்பளத்திற்கு மேலதிகமாக அரசால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் வரப் பிரசாதங்கள் உரித்தாகும்)

03.1. பதவிப் பெயர் - ஆலோசனை உதவியாளர்
சேவை வகுதி – "முகாமைத்துவ உதவியாளர" - தொழில் நுட்பம் (MA 2 -1)
வெற்றிடங்களின் எண்ணிக்கை – 30

03.1.1. தகைமைகள்

03.1.1.1. வெளிவாரி விண்ணப்பதாரிகள்

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்

கொள்ளப்பட்ட தொழில்நுட்ப / தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற் திறன்கள் (NVQ) மற்றும் (05) ஆம் மட்டத்திற்கு குறையாத மட்டத்தில் உரிய துறையில் டிப்ளோமா பெற்றிருத்தல்.

அல்லது

கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சையில் குறைந்தது மூன்று பாடங்கள் (சாதாரண பொது பரீட்சைத் தவிர்ந்த) சித்தி அடைந்திருத்தல்

அத்துடன்

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தொழிற்பயிற்சி நிறுவனத்திடமிருந்து ஆலோசனை/ சமூகவியல்/குற்றவியல்/உளவியல்/ சமூகப்பணி ஆகிய பாடத் துறை களில் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா பெற்றிருத்தல்

03.1.1.2. உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு

மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப் பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03.1.2. வயது :

18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணபதாரிகளுக்கு உச்ச வய தெல்லை பொருந்தாது.

03.1.3. சம்பள வகுதி - MA 2-1

03.1.3.1. சம்பள அளவுத் திட்டம் - 01.01.2025 முதல்

மு.சு 01 2025 MA 2-1 (ரூபா50,540 - 10 x 540 - 7 x 630 - 4 x 890 - 20 x 1,190 -ரூபா87,710.00)

(சம்பளத்திற்கு மேலதிகமாக அர சால் அனுமதிக்கப்பட்ட கொடுப் பனவுகள் மற்றும் வரப்பிரசாதங்கள் உரித்தாகும்)

03.2. பதவிப் பெயர் - போதைப்பொருள் கல்வி மற்றும் தகவல் உதவியாளர்

சேவை வகுதி – "முகாமைத்துவ உதவியாளர்" - தொழில்னுட்பம்

வெற்றிடங்களின் எண்ணிக்கை – 03

03.2.1.1. தகைமை

03.2.1.1. வெளிவாரி விண்ணப்பதாரிகள்

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனமொன் றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறன் (NVQ) ஐந்தாம் (05) ஆம் மட்டத்திற்கு குறையாத மட்டத்தில் உரிய துறையில் டிப்ளோமா பெற்றிருத்தல்.

அல்லது

கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சையில் குறைந்தது மூன்று பாடங்களில் (சாதாரண பொது பரீட்சைத் தவிர்ந்த) சித்தி யடைந்திருத்தல்

அத்துடன்

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தொழிற்பயிற்சி நிறுவனத்திடமிருந்து சமூகவியல்/ குற்றவியல்/ உளவியல்/ சமூகப்பணி/ தொடர்பாடல் ஆகிய பாடத் துறை களில் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

03.2.1.2. உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண் ணப்பதாரிகளுக்கான தகைமை களைப் பூர்த்தி செய்திருத்தல்

03.2.2. வயது :

18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

03.2.3. சம்பள வகுதி - MA 2-1

03.2.3.1. சம்பள அளவுத் திட்டம் - 01.01.2025 ஆம் திகதி முதல்

மு.சு 01/ 2025 MA 2-1 (ரூபா50,540 - 10 x 540 - 7 x 630 - 4 x 890 - 20 x 1,190 - ரூபா87,710.00)

(சம்பளத்திற்கு மேலதிகமாக அரசால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் வரப்பிரசாதங்கள் உரித் தாகும்)

**அனைத்து பதவிகளுக்குமான பொதுவான விடயங்கள் :**

அனைத்து விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரசையாக இருப்ப தோடு, பதவிக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை சிறப்பாக நிறை வேற்றவும் தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்றவும் உடல் ரீதியாக பொருத்தப் பாடுடையவராகவும் சிறந்த நடத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று எல்லா விதத்திலும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சமர்ப்பிப் பதற்கான ஊடகம்

அனைத்து விண்ணப்பதாரிகளும் ஆங்கில மொழியில் மட்டும் தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்

**ஆட்சேர்ப்பு செயல் முறை :**

ஆட்சேர்ப்பு அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/அல்லது கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**நியமனத் தன்மை**

நிரந்தரமானது, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு தகுதியுடையவர்

**சேவைக் கட்டணம்**

வெளிவாரி விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பக் கட்டணமாக 500 ருபாவை எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் "தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை" எனும் பெயரில் இலங்கை வங்கியில் நடைமுறைப்படுத்தப்படும் கணக்கு இலக்கம் 1643 இல் வைப்புச் செய்து, காசு வைப்பு பற்றுச் சீட்டின் பிரதியொன்றை நீங்கள் வைத்துக்கொண்டு அதன் மூலப் பிரதியை (Deposit slip) விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பக் கட்டணம் மீள செலுத்தப்படமாட்டாது.

உங்களது தகவல்களை "A4" அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி சபையின் இணைய தளத்தில் (www.nddcb.gov.lk) உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக எழுதி) உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 07.11.2025 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் தலைவர், தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, 383, கோட்டே வீதி, இராஜகிரிய எனும் விலாசத்திற்கு அனுப்பவும். அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது சட்டபூர்வமான சபைகளில் சேவைபுரியும் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவன /திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று உரிய தகைமைகளை பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள்/முழுமையற்ற விண்ணப்பங்கள் /காசு வைப்பு பற்றுச் சீட்டின் மூலப் பிரதியை இணைத்திராத விண்ணப்பங்கள்/ மாதிரி விண்ணப்பத்திற்கமைய விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப் பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஆகியன நிராகரிக்கப்படும்.

ஆட்சேர்ப்புத் தொடர்பாக சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் இறுதித் தீர்மானம் ஆகும்.

தலைவர்,
தேசிய அபாயகரமான ஔடதங்கள்
கட்டுப்பாட்டுச் சபை.

383, கோட்டே வீதி,
இராஜகிரிய,
17.10.2025.

10-285

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2025 (இலங்கை அதிபர் சேவையின் தரம் 3 உத்தி யோகத்தர்கள் மற்றும் மிகை ஊழியர் அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.)

இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவையின் பிரமாணக் குறிப்பின் பிரகாரம், இலங்கை அதிபர் சேவையின் தரம் 3 உத்தியோகத்தர்கள் மற்றும் இலக்கம் அவி/21/1824/308/139 மற்றும் 2021.11.23 திகதியுடைய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இலக்கம், அவி/12/1101/530/035 மற்றும் 2012.08.08 ஆந் திகதியுடைய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை அதிபர் சேவையில் 3ஆம் வகுப்பிற்கு மிகை ஊழியர் சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2026 பெப்புருவரி மாதம் கொழும்பில் நடைபெறும் என இத்தால் அறவிக்கப்படுகின்றது.

02. இந்தப் பரீட்சை தொடர்பான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குகள் இலக்கம் 1885/31 உடையதும் 2014.10.22 ஆம் திகதியுமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதிக் காக பரீட்சை ஒழுங்குகள் (அட்டவணை 01) மற்றும் பாடத்திட்டம் (அட்டவணை 02) கீழே கொடுக்கப் பட்டுள்ளன .

( அ ) ( அட்டவணை 01) - பரீட்சை ஒழுங்குகள்

| பாட இலக் கம் | பாடம் | நேரம் | புள்ளி | சித்தியடை வதற்கு அவசியமான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | தாபனக் கோவை ஒழுங்கு கள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழு வின் நடை முறை ஒழுங்கு விதிகள் | 2 மணி நேரம் | 100 | 40 |
| 02 | பாடசாலைகளில் நிதி நிர்வாகம் மற்றும் நிதிப் பிரமாணங்கள் | 2 மணி நேரம் | 100 | 40 |

(ஆ) ( அட்டவணை 02) - பாடத்திட்டம்

| பாட இலக்கம் | பாடம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 01 | தாபனக் கோவை ஒழுங்குகள் மற்றும் அரசாங்க சேவை ஆ ணை க் கு ழு வி ன் நடைமுறை ஒழுங்கு விதிகள் | தாபனக் கோவையின் VII, VIII, IX, X, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII, ஆகிய அத்தியாயங்கள் மற்றும் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆந் திகதியுடைய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள் குறித்ததான அறிவு பரீட் சிக்கப்படும். |
| 02 | பாடசாலைகளில் நிதி நிர்வாகம் மற்றும் நிதிப் பிரமாணங்கள் | வரவு செலவு மதிப்பீட்டு நிதிக் கட்டுப் பாடு மற்றும் நிதிப் பொறுப்புகளை கையளித்தல், நிதிப் பொறுப்பேற்பு கணக் கிடல் மற்றும் ஏற்றுக்கொள்ளல், கொடுப் பனவுகள், பொது நிதியின் நம்பிக்கைப் பொறுப்பு, முற்பணம் மற்றும் வங்கிக் கணக்குகள், பணிகள் மற்றும் சேவைகள், பொருட்களின் கணக்கெடுப்பு, கணக்காய்வு வினவல் கள், அரச அலுவலகங்களில் பயன் படுத்தப்படும் லெட்ஜர்கள், வருமானம் மற்றும் செலவு சாராம்சங்கள், வங்கி கணக்கிணக்கங்கள், செலுத்தப்படாத ஊதியங்கள், கடமை தொலைபேசிகள் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக் கைகள் மற்றும் நிதிப்பிரமாணங் கள் குறித்து வெளியிடப்பட்ட சுற்றறிக் கைகள் பற்றிய பொதுவான புரிதல் பரீட்சிக்கப்படும். |

03. **பரீட்சை மொழி மூலம் :** பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் நடத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தாம் விரும்பும் ஒரு மொழியில் மாத்திரம் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் தனது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

04. பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து பரீட்சார்த்திகளதும் பெறுபேறுகள் உள்ளக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரிடம் வழங்கப்படும். அதன்படி குறித்த பெறுபேறுகள் www.moe.gov.lk அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட பெறுபேற்று ஆவணம் அனுப்பி வைக்கப் படமாட்டாது.

05. இந்த அறிவிப்பின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 01 முதல் 07 வரை முதல் பக்கத்திலும் எஞ்சியன இரண்டாவது பக்கத்திலும் அமையுமாறு தயாரித் துக் கொள்ள வேண்டும் என்பதுடன், அதற்குரிய தகவல்களைத் தெளிவாக சுய கையெழுத்தில் உள்ளிடவும். மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் பொருந்தாத விண்ணப்பப்படிவங்கள், முழுமையற்ற விதத்தில் தகவல் குறிப்பிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். பூரணப் படுதப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் புகைப்படப் பிரதியொன்றையும் பரீட்சைக் கட்டணம் தொடர்பான பற்றுச் சீட்டின் புகைப்படப் பிரதியொன்றையும் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் பூரணப்படுத்தப் படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்துக்கு அமை வானதா என்பதை விண்ணப்பதாரர் தேடிப்பார்க்க வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் பெயர் சிங்கள மொழி மூல விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

போலியான தகவல்களுக்கு தண்டனைகள் :- விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது கவனமாக சரியான தகவலை வழங்க வேண்டும். இந்தப் பரீட்சை விதிகளின் பிரகாரம் ஒரு விண்ணப்பதாரர் தகுதியற்றவராகக் கண்டறியப்பட்டால், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்கு பிறகு அல்லது எந்த நேரத்திலும் அவரது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படலாம்.

06. விண்ணப்பப்படிவங்கள் 2025, நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி அல்லது அதற்கு முன் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடிய வகையில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் / மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அல்லது தங்களது நிறுவனத் தலைவர் ஊடாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இந்த திகதிக்குப் பிறகு கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

07. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே விண் ணப்பித்துள்ளார்கள் என்ற அனுமானத்தின் கீழ் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்கொள்ளப்படும் இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் எனின் அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியவர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத் தால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன், அவர்களுக்கு அது தொடர்பில் அறிவிக்கும் பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும். அறிவிப்பு பிரசுரிக் கப்பட்டு 02 அல்லது 03 நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவிக்க வேண்டும். அவ்வாறாக அறிவிக்கும் போது, விண்ணப்பதாரரின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் ஆகியவற்றை குறிப்பிடப்படல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரியாயின் அந்த விபரங்களுடன் அனுமதி அட்டை பிரதியொன்றை அனுப்பி வைக்கக்கூடிய தொலைநகல் இலக்கம் குறிப் பிடப்பட்ட கோரிக்கை கடிதம் ஒன்றை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி வைத்து விசாரிப்பது பயனுள்ளதாக இருக்கும். பரீட்சைத் திணைக்களத்தில் விசாரிக்கும் போது தேவைப்பட்டால், விண்ணப்பதாரர் தனது அபேட்சக தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தன் வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பம் அனுப்பும் போது பதிவு செய்து அனுப்பியமைக்கான ரசீதை தயாராக வைத்திருப்பதும் பயனுள்ளதாக இருக்கும். பரீட்சார்த்திக்கு அனுமதி அட்டை வழங்குவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையதாக கருதப்படாது.

08 .

i. அனுமதி அட்டையினை பரிசோதித்து அதில் திருத்தம் செய்யப்பட வேண்டி இருப்பின் நேரத்துடன் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அழைத்து விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும். பரீட்சை மண்டபத்தினுள் திருத்தம் செய்வதற்கான கோரிக்கைகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

ii. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தி யோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் நிர்ணயிக்கப்பட்ட

பரீட்சை சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சையின் முதல் நாளன்று மண்டப பொறுப்பதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

iii. மேலே பந்தி 8 இல் குறிப்பிடப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்ய தவறிய பரீட்சார்த்திகளின் (பின்னர் சமர்ப்பிக்கப்படும்) முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

09. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மண்டப பொறுப்பதிகாரி திருப்தி அடையும் வண்ணம் தங்கள் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

i. தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
iii. செல்லுபடியாகும் இலங்கைச் சாரதி அனுமதிப் பத்திரம்.

மேலும், பரீட்சார்த்திகள் தங்கள் அடையாளத்தை நிரூபிக்கும் வண்ணம் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத்துக்குள் நுழைய வேண்டும்.

தங்கள் அடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தது முதல், பரீட்சை முடிந்து வெளியேறும் வரை, பரீட்சை அதிகாரிகள் அடையாளம் காணும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் இருக்க வேண்டும்.

10. பரீட்சைக் கட்டணம் :

(அ) இந்தப் பரீட்சைக்காக அறவிடப்படும் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப் படமாட்டாது என்பதோடு வேறு எந்த பரீட்சை யொன்றின் கட்டணத்திற்காக மாற்றப்படுவ தற்கும் அனுமதியளிக்கப்படாது.

(ஆ) முழுப் பரீட்சை அல்லது அதன் பகுதிக்கு முதல் தடவை கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(இ) அதன் பிறகு ஒவ்வொரு முறையும் அறவிடப்படும் கட்டணம் பின்வருமாறு.

| | |
|---|---|
| முழுமையான பரீட்சைக்கு | : ரூ . 500.00 |
| ஒரு பாடத்திற்கு | : ரூ . 250.00 |

இந்தப் பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு செலுத்தப்படுமாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் / உப தபால் அலுவலகத்திலும் செலுத்தப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்பிவைத்தல் வேண்டும். ரசீதின் புகைப்பட பிரதியை தம்வசம் வைத்துக்கொள்வது பயனுடையதாகும்.

11. பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் உட்பட்டவர்களாவர். அந்த சட்ட விதிகளை மீறும் பட்சத்தில், அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்ட னைக்கு உட்பட வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

12. சிங்களமற்றும்தமிழ்மொழிமூலங்களில்வெளியிடப்படும் அறிவிப்புகளின் உரைகளுக்கு இடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை அல்லது முரண்பாடு இருந்தால், சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட அறிவிப்பு செல்லுபடியாகும்.

13. இந்த அறிவிப்பில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பில் தீர்மானிப்ப தற்கான உரிமை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளரைச் சாரும்.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி
அமைச்சு.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,
பெலவத்த, இசுருபாய,
2025, ஒற்றோபர் 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**

**இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025 (இலங்கை அதிபர் சேவையின் தரம் 3 உத்தியோகத்தர்கள் மற்றும் மிகை ஊழியர் அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் 3ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.)**

The First Efficiency Bar Examination for Officers of Sri Lanka Principals' Service - 2025 (The Officers who are in Sri Lanka Principals' Service Grade 3 and appointed to Sri Lanka Principals' Service Class 3 on Supernumerary Basis should be sat for the Examination.)

(கோட்ட அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர் / மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் / மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பவும். கடிதவுறையின் இடது மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.)

1. பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்
(கூட்டினுள் உரிய எண்ணை எழுதவும் )
சிங்களம் - 2 ☐
தமிழ் - 3

2. (i) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
..............................................................................
..............................................................................
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) இறுதியில் எழுதப்பட வேண்டிய பெயர் முதலிலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துகள் பின்னராக எழுதப்பட்ட பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
…………………………………………………………
(உதா - GUNAWARDHANA, H.M.S.K)

(iii) முழுப் பெயர் ( சிங்களத்தில் / தமிழில் )
…………………………………………………………

3. முகவரி :
i. தனிப்பட்ட : …………………………………………
ii. அலுவலக : …………………………………………
iii. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி: ……………………
(ஆங்கில பெரிய எழுத்துக்களில் )
iv. தொலைபேசி இலக்கம் : (அலுவலக) ......................
..............................................................................

4. i. அதிபர் சேவையின் வகுப்பு/ தரம் : ................

ii. மிகை ஊழியர் நியமனமா ?:
ஆம் ☐ இல்லை ☐

iii. பாடசாலை / அலுவலகம் :......................................

iv. மாகாணக் கல்வித் திணைக்களம் / வலயக் கல்வி அலுவலகம் ...............................

5. (i) தேசிய அடையாள அட்டை இலக்கம் :
☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) பிறந்த திகதி:
ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(iii) பெண் / ஆண் :
ஆண் - 0 ☐
பெண் -1
(உரிய எண்ணை கூட்டினுள் எழுதவும் )

6. தொலைபேசி இலக்கம்:
☐☐☐☐☐☐☐☐☐☐

7. வர்த்தமானி அறிவிப்பின் பந்தி 02 (அ) இன் கீழ் தரப்பட்டுள்ள பாட இலக்கத்துடன் விண்ணப்பிக்க வேண்டிய பாடங்கள் :

| *பாடம்* | *பாட இலக்கம்* | *விண்ணப்பிக்கும் பாட இலக்கம்* |
|---|---|---|
| தாபனக் கோவை ஒழுங்கு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள் | 01 | |
| பாடசாலைகளில் நிதி நிர்வாகம் மற்றும் நிதிப் பிரமாணங்கள் | 02 | |

கூட்டினுள் உரிய பாட இலக்கம்/இலக்கங்களை எழுதவும்.

8. பரீட்சைக் கட்டணம் :

(i) கட்டணம் செலுத்திய தபால்/ உப தபால் அலுவலகம்:
..........................................................................
(ii) செலுத்தப்பட்ட தொகை :......................................
(iii) செலுத்தப்பட்ட திகதி :..........................................
(iv) பற்றுச் சீட்டு இலக்கம் :.........................................

பற்றுச்சீட்டு கழறாதவாறு இங்கே ஒட்டவும்.
(பற்றுச் சீட்டின் பிரதியொன்றை தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்)

9 . மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்று உறுதியளிக்கிறேன். பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் விதித்துள்ள சட்ட விதிமுறைகளுக்கு நான் உடன்படுகிறேன்.

.................. ……………………..........................

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

10. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,

மேலே விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப தாரர் எனது கோட்டம் /வலயம் /மாகாண உத்தி யோகத்தர் என்றும் இன்றைய தினம் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன். மேலும், விண்ணப்பதாரருக்கு பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை/விண் ணப்பதாரர் பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட் டினை முறையாக ஒட்டியுள்ளார் என்பதையும் உறுதிப் படுத்துகின்றேன்.

.............................................

கோட்ட அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர்/
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் /
மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம்.

முகவரி : ........................
திகதி : ................................
(உத்தியோகபூர்வ பதவி முத்திரை கொண்டு உறுதிப்படுத்தவும்)
(பொருந்தாத வார்த்தைகளை வெட்டிவிடவும்.)

10-251/1

---

**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**

**இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2025 (இலங்கை அதிபர் சேவையின் தரம் 2 உத்தியோகத் தர்கள் மற்றும் மிகை ஊழியர் அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் 2ம் வகுப்பின் தரம் II இல் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.)**

இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக்குறிப்பின் பிரகாரம், இலங்கை அதிபர் சேவையின் தரம் 2 உத்தியோகத்தர்கள் மற்றும் இலக்கம் அவி/21/1824/308/139 மற்றும் 2021.11.23 திகதியுடைய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், இலக்கம் அவி/12/1101/530/035 மற்றும் 2012.08.08 ஆந் திகதியுடைய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் தரம் II இற்கு மிகை ஊழியர் சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை 2026, பெப்புருவரி மாதம் கொழும்பில் நடைபெறும் என இதன்மூலம் அறிவிக்கப்படுகின்றது.

02. இந்தப் பரீட்சை தொடர்பான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குகள் இலக்கம் 1885/31 தாங்கிய 2014.10.22 ஆந் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்களின் வசதிக் காக பாடத்திட்டம் (அட்டவணை 01) மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) **பரீட்சை நடைமுறை** : வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை பாடங்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாப்பத்திரங்களும் சிறு விடைகள் எதிர்பார்க்கப்பட்டு பகுதிக் கட்டமைப்பு மற்றும் கட்டுரை வினாக்களை உள்ளடங்கியவையாகும். (அட்டவணை 01)

| *பாட இலக்கம்* | *பாடம்* | *நேரம்* | *புள்ளி* | *சித்தியடை வதற்கு அவசியமான ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | பாடசாலை நிர்வாகம் மற்றும் மேற்பார்வை | 3 மணி நேரம் | 100 | 40 |
| 02 | பாடசாலை திட்டமிடல் | 3 மணி நேரம் | 100 | 40 |
| 03 | கல்வியில் புதிய போக்குகள் மற்றும் நடைமுறைகள் | 3 மணி நேரம் | 100 | 40 |

**பாடத்திட்டம் :**

(i) பாடசாலை நிர்வாகம் மற்றும் மேற்பார்வை :

ஒரு பாடசாலையின் சிறந்த நிர்வாகத்தில் அதிபர்களது வகிபாகம் தொடர்பில் பரீட்சார்த்தி களின் அறிவையும் புரிதலையும் பரீட்சிப்பதற்கான வினாக்கள் உள்ளடக்கப்படும். பாடசாலை முகாமைத்துவ நடைமுறைகள், கால அட்டவணை தயாரித்தல், பொறுப்பு பகிர்வு, பாடசாலை அபிவிருத்தியில் பொதுமக்களின் பங்களிப்பு, பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவம், பாடசாலை அடிப்படையிலான ஆசிரியர் அபிவிருத்தி, ஆசிரியர் நலன்புரி, மாணவர் நேய பாடசாலை எண்ணக்கரு, மாணவர் மையக் கல்வி போன்ற துறைகள் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படும்.

(ii) **பாடசாலைத் திட்டமிடல் :**

அபிவிருத்தியின் முன்னோடி என்ற வகையில் அதிபர் ஒருவரது பணிகள் தொடர்பாக

பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரீட்சிப்பதற்காக வினாக்கள் உள்ளடக்கப்படும். பாடசாலை முகாமைத்துவ சபை, பாடசாலையின் நோக்கு மற்றும் பணி, பாடசாலை தகவல் அடிப்படைகளை அமைத்தல், கூட்டிணைந்த திட்டங்கள், நீண்ட கால மற்றும் குறுகிய கால திட்டங்கள், வருடாந்த செயல்பாட்டுத் திட்டங்கள், பாடசாலை வலையமைப்பு மற்றும் வள திட்ட மிடல், பிரதேச அபிவிருத்தியில் பாடசாலையின் பங்களிப்பு போன்றன தொடர்பான அறிவு பரீட்சிக் கப்படும்.

(iii) **கல்வியில் புதிய போக்குகள் மற்றும் நடைமுறைகள்:**

கற்றல் மற்றும் கற்பித்தல் தொடர்பான புது எண்ணக்கருக்கள், அனுபவரீதியான கற்றல், தர்க்க ரீதியான சிந்தனை, கல்வியில் சமத்துவம், விசேட தேவைகள் கொண்டோருக்கான கல்வி, முறைசாரா கல்வி, வளர்ந்தோர் கல்வி, வாழ்நாள் நீடித்த கல்வி, தேர்ச்சி மைய கல்வி, வாழ்க்கைக்கான கல்வி, மாணவர் ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டுதல் முதலிய விடயங்கள் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படும்.

03. **பரீட்சை மொழி மூலம் :**

பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் நடத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தாம் விரும்பும் ஒரு மொழியில் மட்டுமே தோற்ற வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப் பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி ஊடகத்தை மாற்ற அனுமதிக்கப்படுவதில்லை.

04. பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து பரீட்சார்த்திகளதும் பெறுபேறுகள் உள்ளக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளரிடம் வழங்கப்படும். அதன்படி குறித்த பெறுபேறுகள் www.moe.gov.lk அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட பெறுபேற்று ஆவணம் அனுப்பி வைக்கப் படமாட்டாது.

05. இந்த அறிவிப்பின் முடிவில் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்தின் பிரகாரம் விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 01 தொடக்கம் 07 வரை முதல் பக்கத்திலும் எஞ்சியன இரண்டாவது பக்கத்திலும் அமையுமாறு தயார் செய்து அதற்கான தகவல்களைத் தெளிவாக சுய கையெழுத்தில் உள்ளிடவும். மாதிரி விண்ணப்ப படிவத்துடன் பொருந்தாத விண்ணப்பப்படிவங்கள், முழுமையற்ற தகவல் குறிப்பிட்ட விண்ணப்பங்கள் அறிவிப்பு இன்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப் பட்ட விண்ணப்பப்படிவத்தின் புகைப்பட பிரதியை மற்றும் பரீட்சைக் கட்டணம் தொடர்பான ரசீதின் புகைப்பட பிரதியை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும் என்பதை அறியத்தருகின்றோம். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்துக்கு அமைவானதா என்பதை விண்ணப்பதாரர் தேடிப்பார்க்க வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் மொழி மூலமான விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டுமென தெரிவித்துக் கொள்கின்றேன். வர்த்தமானி அறிவித் தலின் பின்னர் வரும் திங்கட் கிழமையன்று நிகழ்நிலை மூலமான விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளும் பணிகள் ஆரம்பமாகும்.

**போலியான தகவல்களுக்கு தண்டனை** :

படிவத்தை பூரணப்படுத்தும் போது கவனமாக சரியான தகவலை வழங்க வேண்டும். இந்தப் பரீட்சை விதிகளின் பிரகாரம் ஒரு விண்ணப்பதாரர் தகுதியற்றவராகக் கண்டறியப்பட்டால், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பிறகு அல்லது எந்த நேரத்திலும் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படலாம்.

06. விண்ணப்பப்படிவங்கள் 2025, நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி அல்லது அதற்கு முன் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடிய வகையில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்/வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் / மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது நிறுவனத் தலைவர் ஊடாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இந்த திகதிக்குப் பிறகு கிடைக்கும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

07. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே விண் ணப்பித்துள்ளார்கள் என்ற அனுமானத்தின் கீழ் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் எனின் அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய வர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகளுக்கு அனுமதி

அட்டைகள் வழங்கப்பட்டவுடன், அவர்களுக்கு அது தொடர்பில் அறிவிக்கும் பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும். அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டு 02 அல்லது 03 நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு அறிவிக்க வேண்டும். அவ்வாறாக அறிவிக்கும் போது, விண்ணப்பதாரரின் முழுப் பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் ஆகியவற்றை குறிப்பிடப்படல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்ப தாரியாயின் அந்த விபரங்களுடன் அனுமதி அட்டை பிரதியொன்றை அனுப்பி வைக்கக்கூடிய தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரிக்கை கடிதம் ஒன்றை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி வைத்து விசாரிப்பது பயனுள்ள தாக இருக்கும். பரீட்சை திணைக்களத்தில் விசாரிக்கும் போது தேவைப்பட்டால், விண்ணப்பதாரர் தனது அபேட்சக தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தன் வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பம் அனுப்பும் போது பதிவு செய்து அனுப்பியமைக்கான ரசீதை தயாராக வைத்திருப்பதும் பயனுள்ளதாக இருக்கும். பரீட்சார்த்திக்கு அனுமதி அட்டை வழங்குவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையதாக கருதப்படாது.

08. i. அனுமதி அட்டையிளை பரிசோதித்து அதில் திருத்தம் செய்யப்பட வேண்டி இருப்பின் நேரத்துடன் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அழைத்து விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும். பரீட்சை மண்டபத்தினுள் திருத்தம் செய்வதற்கான கோரிக்கைகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

ii. விண்ணப்ப படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் நிறுவன தலைவரினால் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்படவேண்டும். ஒருவிண்ணப்பதாரர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சை சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சையின் முதல் நாளன்று மண்டப பொறுப்பதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக் கப்படமாட்டார்கள்.

iii. மேலே பந்தி 8 இல் குறிப்பிடப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்ய தவறிய பரீட்சார்த்திகளின் (பின்னர் சமர்ப்பிக்கப்படும்) முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

09. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மண்டப பொறுப்பதிகாரி திருப்தி அடையும் வண்ணம் தங்கள் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய ஆளடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

மேலும், பரீட்சார்த்திகள் தங்கள் அடையாளத்தை நிரூபிக்கும் வண்ணம் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத்துக்குள் நுழைய வேண்டும்.

தங்கள் அடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்ப தாரர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தது முதல், பரீட்சை முடிந்து வெளியேறும் வரை, பரீட்சை அதிகாரிகள் அடையாளம் காணும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் இருக்க வேண்டும்.

10. **பரீட்சைக் கட்டணம்:**

(அ) இந்த பரீட்சைக்காக அறவிடப்படும் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பித் செலுத்தப் படமாட்டாது என்பதோடு வேறு எந்த பரீட்சை யொன்றின் கட்டணத்திற்காக மாற்றப்படுவதற்கும் அனுமதியளிக்கப்படாது.

(ஆ) முழு பரீட்சை அல்லது அதன் பகுதிக்கு முதல் தடவை கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(இ) அதன் பிறகு ஒவ்வொரு முறையும் அறவிடப்படும் கட்டணம் பின்வருமாறு.
முழுமையான பரீட்சைக்கு : ரூ . 500.00
ஒரு பாடத்திற்கு : ரூ . 250.00

இந்த பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு செலுத்தப்படுமாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் / உப தபால் அலுவலகத்திலும் செலுத்தப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்பிவைத்தல் வேண்டும். ரசீதின் புகைப்பட பிரதியை தம்வசம் வைத்துக்கொள்வது பயனுடையதாகும்.

11. பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் உட்பட்டவர்களாவர். அந்த சட்ட விதிகளை மீறும் பட்சத்தில், அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்ட னைக்கு உட்பட வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், பரீட்சார்த்திகள் நாட்டில் தற்போதைய தனிமைப்படுத்தல் விதிகளையும் கடைபிடிக்க வேண்டும்.

12. சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலங்களில் வெளியிடப் படும் அறிவிப்புகளின் உரைகளுக்கு இடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை அல்லது முரண்பாடு இருந்தால், சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட அறிவிப்பு செல்லுபடியாகும்.

13. இந்த அறிவிப்பில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பில் தீர்மானிப்ப தற்கான உரிமை கல்வி அமைச்சின் செயலாளரைச் சாரும்.

நாலக களுவெவ,
செயலாளர்.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி
அமைச்சு.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,
பெலவத்த, இசுருபாய,
2025.10.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**

**இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2025 (இலங்கை அதிபர் சேவையின் தரம் 2 உத்தியோகத்தர்கள் மற்றும் மிகை ஊழியர் அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் தரம் II நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.)**

The Second Efficiency Bar Examination for Officers of Sri Lanka Principals' Service - 2025 (The Officers who are in Sri Lanka Principals' Service Grade 2 and appointed to Sri Lanka Principals' Service Class 2 Grade II on Supernumerary Basis should be sat for the Examination.)

(கோட்ட அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர் / மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் / மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு, எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பவும். கடிதவுறையின் இடது மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.)

1. பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்
(கூட்டினுள் உரிய எண்ணை எழுதவும்)
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐

2. (i) முழுப் பெயர் ( ஆங்கில பெரிய எழுத்துக்களில் ):
(உதா: - HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
…………………………………………………………
(ii) இறுதியில் எழுதப்பட வேண்டிய பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துகள் பின்னராக எழுதப்பட்ட பெயர் ( ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
…………………………………………………………
(உதா - GUNAWARDHANA, H.M.S.K)
(iii) முழுப் பெயர் ( சிங்களத்தில் / தமிழில் )
…………………………………………………………

3. முகவரி
i. தனிப்பட்ட : …………………………………………
ii. அலுவலக : …………………………………………
iii. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி:
…………………………………………………………
(ஆங்கில பெரிய எழுத்துக்களில் )
iv. தொலைபேசி இலக்கம் :
(அலுவலக)…………………………………………

4. i. அதிபர் சேவையின் வகுப்பு / தரம் : ................
ii. மிகை ஊழியர் நியமனமா :

ஆம் : ☐ இல்லை : ☐

iii. பாடசாலை / அலுவலகம் : ...................................
iv. மாகாண கல்வித் திணைக்களம் /
வலயக் கல்வி அலுவலகம் ....................................

5. (i) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

(ii) பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(iii) பெண் / ஆண் :
ஆண் - 0
பெண் -1 ☐
(உரிய எண்ணை கூட்டினுள் எழுதவும்)

6. தொலைபேசி இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

7. வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 02 (அ) இன் கீழ் தரப்பட்டுள்ள பாட இலக்கத்துடன் விண்ணப்பிக்க வேண்டிய பாடங்கள்

| *பாடம்* | *பாட இலக்கம்* | *விண்ணப்பிக்கும் பாட இலக்கம்* |
|---|---|---|
| பாடசாலை நிர்வாகம் மற்றும் மேற்பார்வை | 01 | |
| பாடசாலை திட்டமிடல் | 02 | |
| கல்வியில் புதிய போக்குகள் மற்றும் நடைமுறைகள் | 03 | |

கூட்டினுள் உரிய பாட இலக்கம் / இலக்கங்களை எழுதவும்.

8. இதற்கு முன் இலக்கம் 1086/26 மற்றும் 1999.07.02 ஆந் திகதியுடைய இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்புக்கு ஏற்ப நடைபெற்ற வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் கல்வி நிர்வாகம் மற்றும் மேற் பார்வை பாடத்தில் சித்தி பெற்ற உத்தியோகத்தர்கள் கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 33/2014 இன் பிரகாரம் இந்த 2 ஆவது தடைதாண்டலில் பாடசாலை நிர்வாகம் மற்றும் மேற்பார்வை பாடத்தில் சித்தி பெற வேண்டிய சந்தர்ப்பத்தில் இருந்து விலக்கு அளிக்கப்படுவர். அந்த பாடத்தில் சித்தி பெற்றிருந்தால் வருடம், பெறுபேறு மற்றும் மொழி மூலத்தை குறிப்பிடுக.

| *பாடம்* | *வருடம்* | *பெறுபேறு* | *மொழி ஊடகம்* |
|---|---|---|---|
| கல்வி நிர்வாகம் மற்றும் மேற்பார்வை | | | |

9. பரீட்சைக் கட்டணம் :

(i) கட்டணம் செலுத்திய தபால்/ உப தபால் அலுவலகம் : ..........................................................................

(ii) செலுத்தப்பட்ட தொகை :......................................

(iii) செலுத்தப்பட்ட திகதி :..........................................

(iv) பற்றுச் சீட்டு இலக்கம் :..........................................

பற்றுச்சீட்டு கழறாதவது இங்கே ஒட்டவும்.
(பற்றுச் சீட்டின் பிரதியொன்றை தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்)

10. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்று உறுதியளிக்கிறேன். பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் விதித்துள்ள சட்ட விதிமுறைகளுக்கு நான் உடன்படுகிறேன்.

.................. ……………………..........................

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

10. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,

மேலே விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப தாரர் எனது கோட்டம் / வலயம் / மாகாண உத்தியோகத்தர் என்றும் இன்றய தினம் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன். மேலும், விண்ணப்பதாரருக்கு பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை/ விண்ணப்பதாரர் பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டினை முறையாக ஒட்டியுள்ளார் என்பதையும் உறுதிப் படுத்துகின்றேன்.

.............................................

கோட்ட அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர்/
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் /
மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம்.

முகவரி : ........................
திகதி : ................................
(உத்தியோகபூர்வ பதவி முத்திரை கொண்டு உறுதிப்படுத்தவும்)
(பொருந்தாத வார்த்தைகளை வெட்டிவிடவும்.)

10-251/2

---

**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

## இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

1. இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III இலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதி பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் வெளியிடப் பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை இணையவழி (online) முறை ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக் கொள்வது 2025 ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன் 2025, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி பி.ப 9.00 மணிக்கு முடிவடையும். இப் பரீட்சை 2026 பெப்புருவரி மாதம் நடாத்தப்படும்.

2. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப் படும் எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறு களுக்கமைய திறமை அடிப்படையில் தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கான பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

3. இதன் மூலம் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படும் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 555 ஆகும். நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது வெற்றிடங்கள் எல்லாவற்றையும் நிரப்பாது விடுவதற்கு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரமுண்டு.

4. இப்பரீட்சையின் மூலம் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப் படும் வெற்றிட எண்ணிக்கையில் 3 வீதம் அங்கவீன நபர்களுக்கு ஒதுக்கப்படும். பரீட்சையில் தகைமை பெறுகின்ற அங்கவீன நபர்களில் கூடிய புள்ளி மட்டத்தை அடைகின்ற 3 வீதமானவர்கள் மட்டும் நியமனம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளின் புள்ளிகள் மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் 50 வீதமாவது ஆதல் வேண்டும். அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 27/88 இன் பிரகாரம் அங்கவீன அடிப்படையில் ஆட்சேர்ப்பிற்காக உரித்தாகும்.

5. **சம்பள அளவுத்திட்டம்** : 2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை அட்டவணை II இற்கு ஏற்ப இப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 50,090 - 10x540 - 11x630 - 10x1,010 - 10x1,190 - ரூபா 84,420.00 (MT 1-2025) ஆகும். 2027.01.01 ஆந் தினத்திலிருந்தாகும். அதுவரையில் இச் சுற்றறிக்கையின் அட்டவணை III இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

6. இப்பதவி நிரந்தரமானது. இப் பரீட்சையில் இலங்கை தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கு நியமிக்கப்படும் அலுவலர்களுக்கு உரித்துடைய ஓய்வூதியத் திட்டமானது அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர்கள் கட்டுப் படல் வேண்டும்.

7. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இன் பிரகாரம் மற்றும் அதற்கு இடைநேர் சுற்றறிக்கைகளின் பிரகாரம் பதவிக்குரிய அரசகரும மொழித் தேர்ச்சியை பெறுதல் வேண்டும்.

8. இப் பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருடத்திற்குள் முதலாவது வினைத் திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

9. **தகைமைகள்:** இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்ய பின்வரும் தகைமைகள் ஏற்புடைய தாகும்.

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு பதினெட்டு (18) வயதுக்கு குறையாமலும் முப்பத் தைந்து (35) வயதினை விடவும் மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 2007.11.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1990.11.21 ஆந் திகதிக்கு அல்லது அதன் பின்னர் பிறந்திருப்பவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.)

(இ) சிறந்த நன்னடத்தை மற்றும் நல்ல தேகாரோக்கிய நிலையில் இருத்தல் வேண்டும்.

(ஈ) நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை யாற்றுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) கல்வித் தகைமைகள் :

(01) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா. / த.) ப் பரீட்சையில் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கலாக திறமைச் சித்திகள் ஐந்துடன் (05) ஆறு (06) பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத தவணைகளில் சித்தியெய்திருத்தல்.

(ஊ) ஏனைய தகைமைகள்:

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட, பல்கலைக் கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங் கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து கணினி அறிவியல் /தகவல் தொழில்நுட்பம் / தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையுடன் தொடர்பான டிப்ளோமா / உயர் டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட பாடநெறியொன்றினை கற்று பூர்த்தி செய் திருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட கணினி/ தகவல் தொழில்நுட்பம்/தகவல் மற்றும் தொடர் பாடல் துறைக்கு உரிய டிப்ளோமா பாடநெறி/ அதனை விடக்கூடிய பாடநெறி அல்லது 1500 மணித்தியாளங்களுக்குக் குறையாத பாடநெறியொன்றினை கற்று பூர்த்தி செய் திருத்தல்.

அல்லது

(இ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனத்திலிருந்து அல்லது பாராளுமன்ற சட்டத்தால் நிறுவப்பட்ட சட்ட நிறுவன மொன்றிலிருந்து

(1) கணினி / தகவல் தொழில்நுட்பம் / தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழிற் தகைமை (NVQ) ஐந்து (05) அல்லது அதனை விட உயர்ந்த சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

(2) 1500 மணித்தியாளங்களுக்குக் குறையாத கணினி / தகவல் தொழில்நுட்பம் / தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையுடன் சம்பந்தப்பட்ட பாடநெறி யொன்றினை கற்று பூர்த்தி செய்திருத்தல்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்கு உரித்தான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியான 2025, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

10. **பரீட்சை நடைமுறை** :

10.1 பரீட்சையானது இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக அமையும். இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும். விண்ணப்பிக்கப்படும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

10.2 பரீட்சைக்கான பாடங்களும் அந்த ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|---|
| (i) | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 100 புள்ளிகள் | 2 மணித்தியாலயம் |
| (ii) | உளச்சார்பு | 100 புள்ளிகள் | 1 மணித்தியாலயம் |
| | மொத்தப் புள்ளிகள் | 200 | |

**தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்:**

பரீட்சார்த்தியிடம் காணப்படும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பொதுவான அறிவு, இயங்குதளம்/ மென்பொருள்/ வன்பொருள் தொடர்பான அறிவு, இணையம் மற்றும் ஏனைய தகவல்கள் அமைப்புப் பகுப்பாய்வு, ஆக்கங்கள், பரிசோதனை, செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் (System Analysis, Design, Testing, Implementation and Maintenance) தொடர்பான அறிவு, தரவுத் தளம்(Database) வடிவமைப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான அறிவு, கணினி வலையமைப்பு முகாமைத்துவம் தொடர்பான அறிவு, வலையமைப்பு மற்றும் மின்னஞ்சல் ஆகிய துறைகளுடன் தொடர்பான அறிவினைப் பரீட்சித்துப் பார்க்கும் கட்டமைக்கப்பட்ட மற்றும் பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**உளச்சார்பு:**

இவ்வினாப்பத்திரம், பரீட்சார்த்திகளின் புள்ளிவிபர ஆற்றலினையும் மற்றும் தர்க்க ரீதியாக விடயங்களை முன்வைக்கும் அறிவினையும் பரீட்சித்தல் தொடர்பான வினாக்கள்இவ்வினாத்தாலில்உள்ளடக்கப்பட்டிருக்கும். இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களைக் கொண்டுள்ளதுடன் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

**குறிப்பு :**

கடமை நோக்கங்களுக்காக பரீட்சார்த்திகளின் தகைமையையும் ஆற்றலையும் பரீட்சிக்கக் கூடியதாக இவ்வினாப்பத்திரம்தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருந்த போதிலும் நியமனத் திற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40 வீதத்தையாவது பரீட்சார்த்திகள் பெற வேண்டியுள்ளதுடன், பரீட்சைக்கான மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் 50 வீதத்தையாவது பெறுதல் வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப் பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யக் கூடியவாறு புள்ளி ஒழுங்கு கட்டாயமாக கடை பிடிக்கப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்.

11. **போலியான தகவல்களுக்கான தண்டனை**: விண்ணப்பப் படிவங்களை நிரப்பும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அவரது பரீட்சார்த்த உரிமையை

இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானவை என எப்போதாவது தெரியவருமிடத்து அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும்.

12. **பரீட்சை நிபந்தனைகள் :**

I. தற்போது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவத்தின் தனிப்பட்ட ஆவணக் கோப்பிற்கு உள்ளடக்குவதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டியதுடன், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் சான்றுரைப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை மற்றும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

II. இவ் பரீட்சைக்காக விசேட தேவையுடைய விண்ணப்பதாரர்கள் முன்வரின் விண்ணப் பப்படிவத்தில் கட்டாயமாக குறிப்பிட வேண்டிய துடன் உரிய வைத்திய சான்றிதழ்களின் நிழற் பிரதியுடன் “பரீட்சை ஆணையாளர் நாயகம் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ.1503, கொழும்பு” எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

III. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தான் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலே விடையளிக்க வேண்டும். பரீட் சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப் பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தை மாற்று வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. சகல பரீட் சார்த்திகளும் வினாப்பத்திரங்கள் இரண்டிற்கும் தோற்றுதல் வேண்டும்.

IV. இணையவழி (online) பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் முழுமைப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி ஊடாக அனுப்பிய மென்பிரதி செல்லுபடியான விண்ணப்பப்படிவமென திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா / ஏற்றுக்கொள்ளப்பட வில்லையா என தொகுதியினுள் பிரவேசிக்கப் பயன்படுத்தப்படும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (ஈ-மெயில்) முகவரிக்கு அறிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயார்படுத்தப்பட்டுள்ள பொதுவான அறிவுரைப் பத்திரத்தை (Common Instructions) பதிவிறக்கம் செய்யவும். விண்ணப் பங்களை பூர்த்தி செய்யும் போது இவ் வறிவுரைகளை கண்டிப்பாகப் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் மேற் கொள்ளப்படும் எந்தவொரு திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாக கருதப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப் படும். இறுதித்தினம் வரையில் விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிப்பதினால் ஏற்படும் எந்த வொரு எதிர்நிலையான நிலைமையொன்று விண்ணப்பதாரரினால் தாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

V. பரீட்சைக் கட்டணம் ரூபா 1200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது இணையவழி அமைப்பில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டண முறைகளின் மூலம் மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கியினதும் கடனட்டை மூலம் (Any Bank Credit Cards)

ii. இணையவழிக் கொடுப்பனவு செய்யக் கூடிய எந்தவொரு பற்று அட்டை மூலம் (Debit Card with online payment facility)

iii. இலங்கை வங்கியின் இணையவழி வங்கி முறையின் மூலம் (Online Banking Method, Bank of Ceylon)

iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Bank of Ceylon Slip Payment)

*குறிப்பு* : மேற்படி முறைகளின் மூலம் கட்டண செலுத்துகை இடம்பெறும் விதம் பற்றிய அறிவுரை இணையத்தில் பரீட்சைக்கு உரித்தான தொழில்நுட்ப ஆலோசனையின் கீழ் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

VI. கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுந்தகவல் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்துக்குரிய முழுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்பதோடு பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப் பட்ட கட்டணச் செலுத்தல் முறையின் ஊடாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

VII. பரீட்சைக்காக செலுத்திய பணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது. அத்தோடு மற்றொரு பரீட்சைக்கு மாற்றப்படவும் மாட்டாது.

VIII. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரசாங்க சேவையின்/ மாகாண சேவையின்/அரசாங்க கூட்டுத்தாபன சேவையின் விண்ணப் பிப்பதாயின் விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தி யோகத்தர் ஒருவரினால், அவ்வாறல்லாத விண்ணப்பதாரிகள் தனது ஒப்பத்தை தமது பிரிவின் கிராம அலுவலரினால், அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், அரச அல்லது மாகாண சேவையின் நிரந்தர பதவிநிலை தரத்துடைய உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது பௌத்த விகாரையின் தலைமைப் பிக்கு அல்லது ஏனைய மதத் தளங்களுக்குப் பொறுப்பான மதத் தலைவர் அவர்களைக் கொண்டு சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

*குறிப்பு* : அனுமதிப்பத்திரமின்றி பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதிப் பத்திரத்தை மாத்திரமே வழங்க வேண்டும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அல்லது பதவிக்கான தகைமை கொண்டவராகக் கருதப்பட மாட்டார்.

IX. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட, விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு விண்ணப்பங்களை முறையாக இணையவழி ஊடாக அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இணையவழி ஊடாக மட்டும் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்ப தாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளபடி அது குறித்து இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை பிழையின்றிக் குறிப்பிடுதல் வேண்டும். அவ் விபரங்கள் குறிப்பிட்ட கோரிக்கை கடிதத்தினை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு கோரும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனுமொருதகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதியையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். அனுமதி அட்டையை பரீட்சித்து திருத்தங்கள் இருப்பின் நேரகாலத்துடன் இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு அழைத்து விண்ணப்பப்படிவத்திற்குரிய திருத்தங்களை செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் செய்யப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

X. இங்கு அட்டவணை 1 இன் படி பரீட்சைக்குத் தோற்றுகின்ற நகரம் மற்றும் நகர இலக்கத்தை விருப்பு ஒழுங்கிற்கு ஏற்ப முதல் மற்றும் இரண்டாம் தெரிவாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பித்த நகரம் / நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்துக்கு விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பின் இரண்டாம் விருப்பமாக குறிப்பிடப் பட்டுள்ள நகரத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும் என்பதோடு, இரண்டாம் நகரத்திலும் போதுமான பரீட்சார்த்திகள் காணப்படாதவிடின் கிட்டிய நகரத்துக்கு அனுப்பப்படுவீர்கள். மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையில் அல்லது பரீட்சை நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு போதிய அளவு விண்ணப்பதாரிகள் காணப்

படாது விடத்து பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். இப் பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச்செய்வதற்குரிய அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயத்திற்குண்டு.

XI. பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி அட்டை வழங்கப்படுதல் பரீட்சார்த்தி இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்படலாகாது. பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தகைமைகளைக் கொண்டுள்ளார்களா என்று பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளை கொண்டிருக்கவில்லை என அறியவருமிடத்து அவர்களின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படும்.

XII. பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்கள் மட்டும் செல்லுபடியாகும்.

i. தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு,
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் அணியவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

XIII. பெறுபேறுகளை வெளியிடல் - எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் புள்ளிகள் 40% இற்குக் கூடுதலாக பெற்றுள்ள மற்றும் பரீட்சையின் மொத்த புள்ளி எண்ணிக்கையில் 50% இனை அல்லது அதற்குக் கூடுதலாக பெற்றுள்ள விண்ணப்பதாரிகளை தெரிவு செய்து அவர்களின் புள்ளிக் கூட்டுத்தொகைக்கு ஏற்ப திறமை ஒழுங்கில் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனான பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையை உள்ளடக்கியவாறு தயாரிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியல் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அனுப்புவதற்கு அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

13.0 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானம் எடுக்கப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இவ் வர்த்தமானி அறிவித்தல் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய இணங்கியொழுகுதல் வேண்டும்.

14.0 இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பதங்களுக்கிடையே இணக்கமின்மை அல்லது முரண்பாடுகள் இருப்பின் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுப்பெறும்.

என்.யு.நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2025, ஒற்றோபர் 14.

**அட்டவணை இலக்கம் I**

பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ள நகரங்கள்

| *தொடரிலக்கம்* | *நகரம்* | *நகர எண்* |
|---|---|---|
| 1 | கொழும்பு | 01 |
| 2 | கண்டி | 04 |
| 3 | காலி | 07 |
| 4 | யாழ்ப்பாணம் | 10 |
| 5 | மட்டக்களப்பு | 15 |
| 6 | குருநாகல் | 18 |
| 7 | அநுராதபுரம் | 20 |
| 8 | பதுளை | 22 |
| 9 | இரத்தினபுரி | 24 |

10-275/1

---

**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025**

1.0 இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதி பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் “Our Services”கீழ் உள்ள “Online Applications – Recruitment Exams/ E.B. Exams” ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்களை இணையவழி (online) முறை மாத்திரமே அனுப்ப வேண்டும். நிகழ்நிலையினூடாக விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்வது 2025, ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகி 2025, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி பி.ப 9.00 மணிக்கு முடிவடையும். இப் பரீட்சை 2026, பெப்புருவரி மாதம் கொழும்பில் நடைபெறும்.

தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தமது தனியாள் கோப்பிற்கு உட்செலுத்துவதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டியதுடன், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கும் சந்தர்ப்பத்தில் தாபன தலைவரினால் சான்றுரைப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

2.0 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப் படும் எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக் கமைய திறமை அடிப்படையில் தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் இலங்கை தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்ப சேவையின் 2 ஆம் வகுப்பின் தரம் II இலுள்ள பதவிகளில் நியமிக்கப்படுவதற்காக தேர்ந்தெடுக்கப்படுவர்கள்.

3.0 இதன் மூலம் நிரப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 132 ஆகும். நியமனம் பயன்வலுப் பெறும் தினம் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் ஒரு வெற்றிட எண்ணிக்கை அல்லது வெற்றிடங்கள் எல்லாவற்றையும் நிரப்பாமல் விடுவதற்கான அதிகாரத்தை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

4.0 இப்பரீட்சையின் மூலம் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படும் வெற்றிட எண்ணிக்கையில் 3% வீதம் அங்கவீனமுடைய நபர்களுக்கு ஒதுக்கப்படும். இதற்கு தகைமை பெறுவதற்கு பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40% மான புள்ளிகளை பெறுதல் வேண்டும். தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளின் முழுப் புள்ளிகளில் குறைந்த பட்சம் 50 வீதமாவது பெறுதல் வேண்டும். அங்கவீன அடிப்படையில் ஆட்சேர்ப்பிற்காக அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 27/88 உரித்தாகும்.

5.0 சம்பள அளவுத்திட்டம்:- 2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை அட்டவணை II இற்கு ஏற்ப இப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 62,230 - 10 x 1,190 - 11 x 1,360 - 15 x 1,670 – 114,140.00 (MN6-2025) ஆகும். அச்சம்பளம் தங்களுக்கு உரித்தாவது 2027.01.01 ஆந் தினத்திலிருந்தாகும். அதுவரையில் இச்சுற்றறிக்கையின் அட்டவணை IIIஇன் ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

6.0 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது மாகும். இப் பரீட்சையில் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு உரித்துடைய ஓய்வூதியத் திட்டமானது அரசாங்கத் தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர்கள் கட்டுப்படல் வேண்டும்.

7.0 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இன் பிரகாரம் மற்றும் அதற்கு விளைவாந்தன்மையான சுற்றறிக்கைகளின் பிரகாரம் பதவிக்குரிய அரசகரும மொழித் தேர்ச்சியை பெறுதல் வேண்டும்.

8.0 இப் பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருடத்திற்குள் முதலாவது வினைத் திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

9.0 தகைமைகள்: - இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்ய பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும் :

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2025.11.21 ஆந் திகதிக்கு விண்ணப் பதாரி 21 வயதுக்கு குறையாத வராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 2004.11.21 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1990.11.21 ஆந் திகதிக்கு அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருப்பவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவர்).

(இ) நன்நடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(ஈ) சகல பரீட்சார்த்திகளும் இலங்கையில் எப் பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியில் கடமை புரிவதற்கும் போதுமான சிறந்த உள, தேகாரோக்கியம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(உ) கல்வித் தகைமைகள்:

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து கணினி தொழில்நுட்பம்/ தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

(2) i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல் கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் இருந்து கணினி விஞ்ஞான/ தகவல் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். (இதன்போது முழுமை யான பட்டமானது ஆகக் குறைந்தது 1/3 பகுதி கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம் தொடர்பானதாக அமைதல் வேண்டும்).

மற்றும்

ii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல் கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் இருந்து கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் பட்ட டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

அல்லது

(3) i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கு முவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் இருந்து பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

ii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் இருந்து கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

குறிப்பு :

1. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் உரிய தகைமைகளை விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

2. இப் பரீட்சைக்காக விசேட தேவை யுடைய விண்ணப்பதாரர்கள் முன்வரின் அது தொடர்பில் கட்டாயமாக குறிப் பிடல் வேண்டும் என்பதுடன், உரிய வைத்திய சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணபப்பபடிவத்தின் அச்சு பிரதி யொன்றுடன் பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

10.0 **பரீட்சை நடைமுறைகள் மற்றும் பாடவிதானம்:**

10.1 பரீட்சையானது மூன்று வினாப்பத்திரங்களைக் கொண்டதாக அமையும். இப்பரீட்சை

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப் பிக்கப்படும் மொழி மூலத்தை பின்னர் மாற்று வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

10.2 பரீட்சைக்கான பாடங்களும் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| *பாடங்கள்* | *நேரம்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *சித்தி யடையப் பெற வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| (01) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 2 மணி | 100 | 40 |
| (02) உளச்சார்பு | 1 மணி | 100 | 40 |
| (03) பொது விவேகம் | 1 மணி | 100 | 40 |

10.3 (01) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் :

பரீட்சார்த்திகளின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கோட்பாடுகள் பற்றிய அறிவு கணினி வடிவமைப்பு மற்றும் இயங்கு தளம்/ மென்பொருட்கள்/ வன்பொருட்கள் தொடர்பான அறிவு, e-அரசாங்கம் (e-gov) எண்ணக்கருவினை மிகவும் பயனுறுதி வாய்ந்த முறையில் செயற்பாட்டில் கொண்டுவருவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு, தகவல்கள் அமைப்புப் பகுப்பாய்வு, ஆக்கங்கள், பரிசோதனை, செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் (System Analysis, Design, Testing, Implementation and Maintenance) தொடர்பான அறிவு, தரவுத்தளம் (Database), வடிவமைப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான அறிவு, வன்பொருள், தரவுத் தொடர்பாடல் மற்றும் கணினி வலையமைப்பு, இணையத்தளம், இணையத்தளங்களை உருவாக்குதல் மற்றும் புதிய இணையத்தள சேவைகள், கணினி வலையமைப்பு முகாமைத்துவம் தொடர்பான அறிவு, இணைய வலை யமைப்பு மற்றும் மின்னஞ்சல் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்திட்ட வாழ்க்கை சுழற்சி போன்ற துறைகள் தொடர்பான அறிவு மற்றும் கண்காணிப்புத் திறனை ஆழமாகப் பரீட்சித்துப் பார்க்கும் வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரமாகும்.

(02) உளச்சார்பு பரீட்சை:

இவ்வினாப்பத்திரம், பரீட்சார்த்திகளின் புள்ளிவிபர ஆற்றலினையும் மற்றும் தர்க்க ரீதியாக விடயங்களை முன்வைக்கும் அறிவினையும் பரீட்சித்தல் தொடர்பான வினாக்கள் இவ்வினாத்தாளில் உள்ளடக் கப்பட்டிருக்கும். இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான ஐம்பது (50) வினாக்களைக் கொண்டுள்ள துடன் எல்லா வினாக்களுக்கும் விடை யளிக்க வேண்டும்.

(03) பொது விவேகம் :

புள்ளிவிபரவியல் ரீதியாக, மொழி ரீதியாக, வடிவக் கட்டமைப்புக்கள், உறவுகளுக்கிடையிலான தொடர்புகள் போன்ற பிரச்சினைகள் மட்டிலான பகுப்பாய்வுத் திறமை, தர்க்க ரீதியான அறிவு, பொருள்க்கோடல் திறமை, வேறுநிலைமைகளுக்கு உரித்தாக்கிக் கொள்ளத்தக்க ஆற்றல் மற்றும் முடிவுகளை எட்டுதல் தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவு மட்டத்தை அளவிடுதல், இதன் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான வினாக்களைக் கொண்டுள் ளதுடன் எல்லா வினாக் களுக்கும் விடையளிக்க வேண்டும்.

குறிப்பு :

3 : கடமை நோக்கங்களுக்காக பரீட் சார்த்திகளின் தகைமையையும் ஆற்றலை யும் பரீட்சிக்கக் கூடியதாக இவ் வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருந்த போதிலும் நியமனத்திற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளி களில் ஆகக் குறைந்தது 40 வீதத்தையாவது பெற வேண்டி யுள்ளதுடன், பரீட்சைக்கான மொத்தப் புள்ளிகளில் 50 வீதத்தை யாவது பெறுதல் வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற் றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யக் கூடியவாறு புள்ளி ஒழுங்கு கட்டாயமாக கடைபிடிக்கப்பட்டு நிய மனங்கள் வழங்கப்படும்.

10.4 நிரப்புவதற்கு தீர்மானித்துள்ள வெற்றிட எண்ணிக்கைக்கு சமமான பரீட்சார்த்தி களின் எண்ணிக்கையை உள்ளடக்கியவாறு

பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் உள்ளடங்கும் வண்ணம் தயாரிக் கப்பட்ட முன்னுரிமை அட்டவணையொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அதற்கு மேலதிகமாக பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அனுப்புவதற்கு அல்லது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தில் பிரசுரிப்பதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**நேர்முகப் பரீட்சை :**

எழுத்துமூலப் பரிட்சையின் அனைத்து வினாத் தாள்களுக்கும் தோற்றிய பரீட்சார்த்திகளிடையேயிருந்து இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளின் தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும். அந் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

11.0 **போலியான தகவல்களுக்கான தண்டனை :**

விண்ணப்பப்படிவங்களை நிரப்புகின்ற போது சரியான தகவல்களை வழங்குவது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்துதல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து, அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானவை என எப்போதாவது தெரியவருமிடத்து அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும்.

12.0 **பரீட்சை நிபந்தனைகள்:**

I. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தான் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலே விடையளிக்க வேண்டும். பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. சகல பரீட்சார்த்திகளும் வினாப்பத்திரங்கள் மூன்றுக்கும் தோற்றுதல் வேண்டும்.

II. பரீட்சைக்கான நிகழ்நிலை (online) விண்ணப்பங்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் முழுமைப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி ஊடாக அனுப்பிய மென்பிரதி செல்லு படியான விண்ணப்பப்படிவமென திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ ஏற்றுக்கொள்ளப்படவில்லையா என தொகுதி யினுள் பிரவேசிக்கப் பயன்படுத்தப்படும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (ஈ-மெயில்) முகவரிக்கு அறிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயார்படுத்தப்பட்டுள்ள பொதுவான அறிவுரைப் பத்திரத்தை (Common Instructions) பதிவிறக்கம் செய்யவும். விண்ணப்பங்களைபூர்த்தி செய்யும் போது இவ்வறிவுரைகளை கண்டிப்பாகப் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாக கருதப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

III. பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது இணையவழி அமைப்பில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டண முறைகளின் மூலம் மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கியினதும் கடனட்டை மூலம் (Any Bank Credit Cards)

ii. இணையவழிக் கொடுப்பனவு செய்யக்கூடிய எந்தவொரு பற்று அட்டை மூலம் (Debit Card with online payment facility)

iii. இலங்கை வங்கியின் இணையவழி வங்கி முறையின் மூலம் (Online Banking Method, Bank of Ceylon)

iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Slip Payment, Bank of Ceylon)

குறிப்பு :

4. மேற்படி முறைகள் மூலம் கொடுப்பனவினை மேற்கொள்ள முடியும் என்பதுடன் அவை தொடர்பான அறிவுரைகள் இணையத்தளத்தின் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனை என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

IV. கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுந்தகவல் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்துக்குரிய முழுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்பதோடு பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப் பட்ட கட்டணச் செலுத்தல் முறையின் ஊடாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

V. பரீட்சைக்காக செலுத்திய பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது அத்தோடு மற்றொரு பரீட்சைக்கு மாற்றப்படவும் மாட்டாது.

VI. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். அரசாங்க சேவையின்/ மாகாண சேவையின்/ அரசாங்க கூட்டுத்தாபன சேவையின் விண்ணப்பிப்பதாயின் விண்ணப்ப தாரி தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால், அவ்வாறல்லாத விண்ணப்பதாரிகள் தனது ஒப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் / ஓய்வு பெற்ற ஒரு உத்தியோகத்தர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், அரசாங்க அல்லது மாகாண சேவையின் நிரந்தர பதவிநிலை தரத்துடைய உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரை யொன்றின் விகாராதிபதி அல்லது பௌத்த விகாரையின் தலைமைப் பிக்கு அல்லது ஏனைய மதத் தளங்களுக்குப் பொறுப்பான மதத் தலைவர் அவர்களைக் கொண்டு சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

குறிப்பு :

5. அனுமதிப்பத்திரமின்றி பரீட்சை மண்டபத் தினுள் நுழைவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதிப் பத்திரத்தை மாத்திரமே வழங்க வேண்டும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அல்லது பதவிக்கான தகைமை கொண்டவராகக் கருதப்படமாட்டார்.

VII. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட, விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு விண்ணப்பங்களை முறையாக இணையவழி ஊடாக அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இணையவழி ஊடாக அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்ப தாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளபடி அது குறித்து இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை பிழையின்றிக் குறிப்பிடுதல் வேண்டும். அவ் விபரங்கள் குறிப்பிட்ட கோரிக்கை கடிதத்தினை அறிவித்தலில் குறிப் பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு கோரும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப் படுத்துவதற்காக தன்வசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியையும் தயாராக வைத்திருப்பது பயன் மிக்கதாகும்.

குறிப்பு :

6. அனுமதி அட்டையை பரீட்சித்து திருத்தங்கள் இருப்பின் நேரகாலத்துடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அழைத்து விண்ணப்பப்படிவத்திற்குரிய திருத்தங்களை செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் செய்யப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

VIII. இப் பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்குரிய அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு உரிமையுண்டு.

IX. பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி அட்டை வழங்கப் படுதல் பரீட்சார்த்தி இப்பதவிக்குரிய தகைமை களைக் கொண்டுள்ளார் என ஏற்றுக் கொள்ளப் படலாகாது. பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தகைமைகளைக் கொண்டுள்ளார்களா என்று பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளை கொண்டிருக்கவில்லை என அறியவருமிடத்து அவர்களின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படும்.

X. பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :

i. தேசிய ஆளடையாள அட்டை ;
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் அணியவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளங் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

XI. பெறுபேறுகளை வெளியிடல் - எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் புள்ளிகள் 40% இற்குக் கூடுதலாக பெற்றுள்ள மற்றும் பரீட்சையின் மொத்த புள்ளி எண்ணிக்கையில் 50% இனை அல்லது அதற்குக் கூடுதலாக பெற்றுள்ள விண்ணப்பதாரிகளை தெரிவு செய்து அவர்களின் புள்ளிக் கூட்டுத்தொகைக்கு ஏற்ப திறமை ஒழுங்கில் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக் கைக்குச் சமனான பரீட்சார்த்திகளின் எண்ணிக் கையை உள்ளடக்கியவாறு தயாரிக்கப் பட்ட முன்னுரிமை ஆவணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப் படும்.

பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்தி களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அனுப்புவதற்கு அல்லது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணை யத்தளத்தில் பிரசுரிப்பதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

13.0 மேலும், இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய இணங்கியொழுகுதல் வேண்டும்.

14.0 இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல அறிவித்தல்களுக்கிடையே ஏதேனும் இணக்கமின்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி அறிவித்தலே வலுவிலிருக்கும்.

என்.யூ.நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2025, ஒற்றோபர் மாதம் 14.

10-275/2

## பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## இலங்கை தகவல்,தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2025

1.0 இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தகுதி பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பங்கள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் “Our Services” கீழ் “Online Applications – Recruitment Exam/ E.B. Exams” ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை நிகழ்நிலை (online) ஊடாக மாத்திரமே அனுப்ப வேண்டும். நிகழ்நிலையினூடாக விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்வது 2025 ஒற்றோபர் மாதம் 21 ஆம் தினம் மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகி 2025, நவெம்பர் மாதம் 21 ஆம் திகதி பி.ப 9.00 மணிக்கு முடிவடையும். இப் பரீட்சை 2026, பெப்புருவரி மாதம் கொழும்பில் நடைபெறும்.

உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி யொன்றை தமது தனிப்பட்ட கோவைக்கு உள்வாங்கு வதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டி யதுடன், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் சான்றுரைப் படுத்திய விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை மற்றும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

2.0 பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும் எழுத்து மூலமான பரீட்சையின் பொறுபேறுகளின் பிரகாரம் திறமை அடிப்படையில் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இன் பதவிகளுக்காக நியமிப்பதற்காக தெரிவு செய்யப்படுவார்கள்.

3.0 இதன் மூலம் நிரப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 57 ஆகும். நியமனம் பயன்வலுப் பெறும் தினம் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்களில் ஏதேனும் ஒரு தொகையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரத்தை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

4.0 **சம்பள அளவுத்திட்டம்:** 2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை அட்டவணை II இற்கு ஏற்ப இப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 62,230.00 - 10 x 1,190 - 11 x 1,360 - 15 x 1,670 – ரூபா 114,140.00 (MN 6-2025) ஆகும். அச்சம்பளம் தங்களுக்கு உரித்தாவது 2027.01.01ஆந் தினத்திலிருந்தாகும். அதுவரையில் இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

5.0 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள் மற்றும் அநாதைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைமைக்கு பங்களிப்பு பணம் செலுத்துதல் வேண்டும்.

6.0 அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 இன் பிரகாரம் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின் பிரகாரம் பதவிக்குரிய அரசகரும மொழித்தேர்ச்சியை பெற்றிருத்தல் வேண்டும்.

7.0 இவ் பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருடத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையை சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

8.0 **தகைமைகள் :** இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்கு நியமிப்பது தொடர்பாக பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் ஏற்புடையதாகும் :

(அ) இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்நடத்தையுடைய வர்களாக இருத்தல் வேண்டும் ;

(இ) அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக் குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவை யான உடல், உள ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) அனுபவம்

(1) இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் I அலுவலராக இருத்தல் அல்லது 2 ஆம் தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனையொன்று பெற்றிருக்காமை

அல்லது

(2) (i) இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III இல் 05 ஆண்டு கால முனைப்புடனானதும், திருப்திகரமானதுமான

சேவைக்காலத்தைக் பூர்த்தி செய்துள்ள பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தராகவிருத்தல் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனையொன்று பெற்றிருக்காமை

மற்றும்

(ii) இவ்வறித்தலின் 8.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

(உ) மேற்படி தகைமைகளுக்கு மேலதிகமாக விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று அலுவலர் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

8.1 **கல்வித் தகைமைகள் :**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து கணினியியல்/தகவல் தொழிநுட்பம் தொடர்பான பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

(2) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து அல்லது கணினியியல் / தகவல் தொழிநுட்பம் பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். ( இதன் போது முழுமையான பட்டமானது ஆக குறைந்தது 1/3 பகுதி கணினியியல்/ தகவல் தொழிநுட்பம் தொடர் பானதாக அமைதல் வேண்டும்.)

மற்றும்

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து அல்லது கணினியியல் / தகவல் தொழிநுட்பம் தொடர் பான பட்டப்பின் டிப்ளோமா பெற்றிருத்தல்.

(3) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனமொன்றில் இருந்து அல்லது கணினியியல்/தகவல் தொழிநுட்பம் தொடர்பான பட்டப்பின் பட்டம் பெற்றிருத்தல்.

**குறிப்பு :**

1. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் உரிய பதவிக் குரிய அனைத்து தகைமைகளை விண்ணப்ப முடிவுத் திகதி 2025, நவெம்பர் மாதம் 21 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

9.0 **பரீட்சை நடைமுறை மற்றும் பாடவிதானம் :**

பரீட்சையானது இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக அமையும். இப்பரீட்சை சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| *வினாப்பத்திரம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளி* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| உளச்சார்பு | 1 மணி. | 100 | 40 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விடய ஆய்வு | 2 மணி. | 100 | 40 |

1. **உளச்சார்புப் பரீட்சை :**

இவ்வினாப்பத்திரம், பரீட்சார்த்திகளின் எண்கணித ஆற்றல், தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் என்பவற்றைச் சோதிக்கக் கூடிய வினாக்களைக் கொண்டதாக அமையும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களை கொண்டுள்ளதுடன், எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

2. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விடய ஆய்வு :

அரசாங்க சேவையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் ஏற்படக்கூடிய ஒரு பிரச்சினை அல்லது பல பிரச்சினைகள் சம்பந்தமாக கட்டமைக்கப்பட்ட நிகழ்வு / நிகழ்வுகள் பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்பட்டு பரீட்சார்த்தியின் படைப்பாற்றலுடன் கூடிய சிந்தனா சக்தி மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கக்கூடிய திறன், தாபனவிதிக் கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்குரிய அரசாங்க சேவையின் பரிச்சயங்கள் ஆகியனவற்றை அளவீடு செய்வதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. கட்டமைக்கப்பட்ட மாதிரியான வினாக்கள் மற்றும் கட்டுரைகளைக் கொண்டதாக இவ்வினாப்பத்திரம் அமைந்துள்ளது. அத்துடன் அனைத்து வினாக் களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

2. **குறிப்பு :** கடமை நோக்கங்களுக்காக பரீட் சார்த்திகளின் தகைமையையும் ஆற்றலையும் பரீட்சிக்கக் கூடியதாக இவ்வினாப்பத்திரம் அமையும். இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சை யாக இருந்த போதிலும் நியமனத்திற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% வீதத்தையாவது பெற வேண்டியுள்ளதுடன், பரீட்சைக்கான மொத்தப் புள்ளிகளில் 50% வீதத்தையாவது பெறுதல் வேண்டும். பெற்ற புள்ளிகளின் திறமை ஒழுங்குமுறை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு, போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யக் கூடியவாறு நியமனங்கள் வழங்கப்படும்.

10.0 **பிழையான தகவல்களுக்கான தண்டனைகள் :** விண்ணப்பப்படிவங்களை நிரப்புகின்ற போது சரியான தகவல்களை வழங்குவது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்துதல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து, அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரர் சமர்ப்பித்துள்ள தகவல்கள் பிழையானவை என எப்போதாவது தெரியவருமிடத்து அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும்.

11.0 **பரீட்சை நிபந்தனைகள்:**

I. பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்புகின்ற ஏதாவதொரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். அத்துடன் பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் சகல வினாத்தாள்களிலும் உள்ள வினாக்களுக்கு ஒரு மொழியிலேயே பதிலளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகளினால் தத்தமது விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தினை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது. எல்லா பரீட்சார்த்திகளும் இவ்விரு வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

II. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவத்தை ஆங்கில மொழி மூலம் மட்டும் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்ப தாரியினால் நிகழ்நிலை (Online) மூலம் முன்வைக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவமாகத் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக/ ஏற்றுக்கொள்ளப்பட வில்லை என கையடக்கத் தொலைபேசி இலக்கத் திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தைப் பூரணப் படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப் பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பொது அறிவுரைப் பத்திரத்தைப் (Common Instruction) பதிவிறக்கம் செய்யவும். விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது, இவ் அறிவுரைகளைக் கண்டிப்புடன் கடைப்பிடிக்கவும். நிகழ்நிலை மூலம் முன்வைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியொன்றைப் பெற்றுக்கொண்ட பின்னர், அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாகக் கருதப்படமாட்டாது. குறைபாடுள்ள விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப் படும்.

III. இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, நிகழ்நிலை அமைப்பின் மூலம் வழங்கப்படும் கீழ்க் குறிப்பிடப்படும் கட்டணம் செலுத்தப்படும் வழிமுறையின் கீழ் மட்டும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் :

i. எந்தவொரு வங்கி கடனட்டையின் மூலம் (Any Bank Credit Card);

ii. இணையதளக் கொடுப்பனவு வசதிகள் உள்ள எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Debit Card with online payment facility);

iii. இலங்கை வங்கி ஒன்லைன் வங்கி முறையின் மூலம் (Online Banking method, bank of Ceylon);

iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Teller Slip Payment, Bank of Ceylon).

குறிப்பு :

3. மேற்படி முறைகளின் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை தொடர்பான அறி வுரைகள் இணையதளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுரைகளின் கீழ் வெளி யிடப்பட்டுள்ளது.

IV. கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதாகக் குறுந்தகவலொன்று (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு விதித்துரைக்கப்பட்டுள்ள பணத்தைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது அதிகமாகச் செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது, ஏற்படும் தவறுகள் தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக் கூறமாட்டாது.

V. பரீட்சைக்காக செலுத்தப்படும் பணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படுவதற்கு அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

VI. விண்ணப்பதாரி பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் கையொப்பத்தினை சான்றுரைப் படுத்தல் வேண்டும். விண்ணப்பதாரி தமது கையெழுத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் மூலம் சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

குறிப்பு :

4. அனுமதி அட்டையின்றி பரீட்சைகள் மண்ட பத்திற்கு உட்செல்வதற்கு இடமளிக்கப்படாது. பரீட்சை ஆரம்பிக்கும் திகதி பரீட்சைகள் மண்டபத்தின் பொறுப்பதிகாரிக்கு சமர்ப்பிக்க பட வேண்டிய ஆவணமானது தங்கள் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டுள்ள அனுமதி அட்டையை மட்டுமேயாகும். பரீட் சார்த்தியொருவருக்குப் பரீட்சைகள் அனுமதி அட்டையொன்று வழங்கப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவிக்காக தகைமைகள் கொண்டுள்ளதாக ஏற்றுக்கொண்டுள்ளதாகக் கருதுதலாகாது.

VII. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப் பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வய தெல்லைக்குட்பட்ட, விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு விண்ணப்பங்களை முறையாக இணையவழி ஊடாக அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இணையவழி ஊடாக மட்டும் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அது குறித்து இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை பிழையின்றிக் குறிப்பிடுதல் வேண்டும். அவ் விபரங்கள் குறிப்பிட்ட கோரிக்கை கடிதத்தினை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு கோரும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப் படுத்துவதற்காக தன்வசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதியையும் தயாராக வைத்திருப்பது பயன் மிக்கதாகும். அனுமதி அட்டையை பரீட்சித்து திருத்தங்கள் இருப்பின் நேரகாலத்துடன் இலங்கைப் பரீட்சை திணைக்களத்திற்கு அழைத்து விண்ணப்பப்படிவத்திற்குரிய திருத்தங்களை செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் செய்யப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

VIII. பரீட்சார்த்தியொருவருக்குப் பரீட்சைகள் அனுமதி அட்டையொன்று வழங்கப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவியின் பொருட்டு தகைமைகள் கொண்டுள்ளதாக ஏற்றுக் கொண்டுள்ளதாகக் கருதுதலாகாது. அனுமதிப்பத்திரத்தினை பரீட்சித்து பார்த்து திருத்தங்கள் இருப்பின் காலநேரம் எடுத்து இலங்கை பரீட்சை திணைக்களத்தினை அழைத்து விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் உரிய திருத்தங்களை செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தஞ் செய்வதற்கு மேற் கொள்ளப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

IX. பரீட்சையை காலம் தாழ்த்துதல் அல்லது இரத்து செய்யும் அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினை சார்ந்ததாகும்.

X. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடல் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சையின் பரீட்சார்த் திகள் இணங்கியொழுகுதல் வேண்டும். சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் தண்டனைக்கு கீழ்ப்படிவதற்கு அவருக்கு நேரிடும். பரீட்சார்த்தியொருவருக்குப் பரீட்சைகள் அனுமதி அட்டையொன்று வழங்கப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவியின் பொருட்டு தகைமைகள் கொண்டுள்ளதாக ஏற்றுக் கொண்டுள்ளதாகக் கருதுதலாகாது. விண்ணப்பதாரரை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தகைமைகள் உள்ளனவா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரியவருமாயின் அவரின் பரீட்சை அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்படும்.

XI. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபத்தின் பொறுப்பதிகாரி திருப்பதியடையும் வகையில் தமது சுய ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும் :

i. தேசிய ஆளடையாள அட்டை ;
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு ;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் மற்றும் மின் தொடர்பாடல் கருவிகளை அணிந்திருக்க வில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டும் மூடியிருக்காத வாறு பரீட்சைகள் மண்டபத்திற்குள் உட்செல்லுதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைகள் மண்டபத்திற்கு உட்செல்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. மேலும், பரீட்சை கள் மண்டபத்திற்கு உட்சென்ற நேரம் தொடக்கம் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாதிருத்தல் வேண்டும்.

XII. **பெறுபேறுகளை வெளியிடல்:** எழுத்துமூல பரீட்சை யில் ஒவ்வொரு பாடத்துக்கும் 40% வீதத்திற்கு குறையாமலும் மற்றும் முழுமொத்த பரீட்சையினதும் புள்ளிகளின் எண்ணிக்கையின் 50% அல்லது அதற்கு அதிகமாகவும் புள்ளிகள் பெற்ற பரீட் சார்த்திகளை தேர்ந்தெடுத்து அவர்களின் அப் புள்ளிகளின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப திறமை அடிப்படையில் நிரப்ப எதிர்பார்க்கப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கு சமனான பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப் பட்ட முன்னுரிமைப் பட்டியல் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்புவதும், www.results.exams.gov.lk எனும் இணையத் தளத்தில் வெளியிடுவதும் பரீட்சைகள் ஆணை யாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

12.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளி யிடப்படும் அனுமதிப்பத்திரம் உள்ள உத்தி யோகத்தர்களுக்கு பரீட்சையில் தோற்றுவதற்கு இயன்ற பிரகாரம் திணைக்கள தலைவர்களினால் கடமை விடுமுறை வழங்குதல் வேண்டும். பயணக் கட்டணங்கள் செலுத்தப்படமாட்டாது.

13.0 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானங்கள் மேற் கொள்ளப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளுக்கான பொது ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகக் கடமைப்பட்டுள்ளனர்.

14.0 இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வசனங்களுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழி அறிவித்தலே வலுவானதாக அமையும்.

என்.யூ.நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2025, ஒற்றோபர் மாதம் 14.

10-275/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.